விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 15 | ஞாயிற்றுக்கிழமை (27.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 70

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# அரசிலிருந்து இ.தொ.க. வெளியேற்றம்

# அவசர சந்திப்புக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்குமிடையில் ஏற்பட்டுள்ள பிணக்கு குறித்து பேச்சுவார்த்தை நடத்த வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அழைப்பு விடுத்துள்ளார். நாளை முற்பகல் 11 மணிக்கு இச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இ.தொ.கா. அங்கத்தவர்களான அமைச்சர் முத்து சிவலிங்கம், பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி ஆகியோர் பிரதமர் அலுவலகத்தில் சமர்ப்பித்த ராஜினாமா கடிதங்களை பிரதமர் ஜனாதிபதியிடம் கையளித்ததுடன் இவர்களின் ராஜினாமா குறித்து, தெரிவிக்கப்பட்ட காரணங்களையும் ஜனாதிபதியிடம் விளக்கியுள்ளார். இதனையடுத்தே, ஜனாதிபதி தன்னை சந்தித்து பேசுமாறு ஆறுமுகன் தொண்டமானுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அமைச்சர் முத்துசிவலிங்கத்திடம் கேட்டபோது, ஜனாதிபதி எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். நாம் எமது அதிருப்திகளை அவரிடம் தெரிவிப்போம். எமது பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உரிய தீர்வை வழங்குவார் என நாம் நம்புகிறோம். அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்போம் என்றார். அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. அவ்வாறிருக்க ஏன் பிரதமரிடம் ராஜினாமா கடிதங்களை கையளித்தீர்கள் என கேட்டபோது ஜனாதிபதியை (12 ஆம் பக்கம் பார்க்க)



# அமைச்சர்களுக்கு கைலாகு கொடுத்த

# கேணல் சூசைக்கு எதிராக முறையீடு

## புகழுடலுக்கு இன்று இறுதி வணக்கம்

தலைவர் பிரபாவின் மாமனாரும் நாட்டுப்பற்றாளருமான வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்புவின் இறுதி வணக்க நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை முதல் கிளிநொச்சியில்

## தலைவர் பிரபாவிடம் செய்வேன் என்கிறார் ரவூப் ஹக்கீம்

(புத்தளத்திலிருந்து நமது நிருபர்)

**அமைச்சர்களுக்கு கைலாகு கொடுத்து வரவேற்பளித்த கடற்புலிகளின் தலைவர் கேணல் சூசை போன்றோரின்**

## இளவரசர் சாள்ஸ் நாளை மட்டு. விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு குறுகியகால விஜயம் மேற்கொள்ளும் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் நாளை காலை மட்டக்களப்புக்கு விஜயம்

## புகழுடலுக்கு இன்று இறுதி வணக்கம்

தலைவர் பிரபாவின் மாமனாரும் நாட்டுப்பற்றாளருமான வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்புவின் இறுதி வணக்க நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை முதல் கிளிநொச்சியில் உள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் இறுதிவணக்க நிகழ்வு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அவரது புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு திருநகர் மயானத்தில் தீயுடன் சங்கமிக்கப்படும். (த-04)

# தலைவர் பிரபாவிடம் செய்வேன் என்கிறார் ரவூப் ஹக்கீம்

**(புத்தளத்திலிருந்து நமது நிருபர்)**

**அமைச்சர்களுக்கு கைலாகு கொடுத்து வரவேற்பளித்த கடற்புலிகளின் தலைவர் கேணல் சூசை போன்றோரின் செயற்பாடுகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

புத்தளம் நகரமண்டபத்தில் நேற்றிரவு 7.45 மணியளவில் நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் யாழ். மாவட்ட மகாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழ்த் தேசிய போராட்டம் வெற்றியடைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் சாள்ஸ் நாளை மட்டு. விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு குறுகியகால விஜயம் மேற்கொள்ளும் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் நாளை காலை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை காலை 7.30 மணிக்கு விசேட விமானம் மூலம் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொள்ளும் அவர் நாவலடி கிராமத்திற்கும் பின்னர் மட்டக்குளிக்கும் சென்று சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவார்.

இவரது விஜயத்திற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சிலிருந்தும் பிரித்தானிய தூதுவராலயத்திலிருந்தும் நேற்று முன்தினம் அரச உயர் அதிகாரிகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர். (த-04)

## இலங்கைக்கு அதிகளவில் சுனாமி நிவாரணம் திக்குமுக்காடுகிறது சமூக சேவைத் திணைக்களம்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தை தொடர்ந்து கொடையாளி நாடுகளிலிருந்து இலங்கைக்கு அதிகமாக நிவாரணப் பொருட்கள் கிடைத்து வருவதால் தாங்கள் திக்குமுக்காடிப் போயுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் சுமேதா ஜெயசேன தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கு அதிகமாக சேமிப்பு கிடங்கில் உலர் உணவும் ஏனைய பொருட்களும் குவிந்து கிடப்பதாக பிரெஞ் செய்தி நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் நிருபமராவ் நேற்று பருத்தித்துறை விஜயம்

(துன்னாலை)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் தலைமையிலான குழு நேற்று குடாநாட்டுக்கு விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டது.

குறிப்பாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, வைத்திய சேவைகளை விஸ்தரிக்கவும் வைத்திய சாலைகளின் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குச் சென்ற தூதுவர் அங்குள்ள நிலைமைகளை வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளையிடமும் நிர்வாக உத்தியோகத்தர் க. சின்னத்தம்பியிடமிருந்தும் கேட்டறிந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக ஐ.தே.க. வாக்களிக்கும்

அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக் வாக்களிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருப்பதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைத்திய சங்கத்தின் கிளைக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

சுனாமி பேரழிவுக்காக அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. அரசாங்க ஊழியர்களின் போராட்டத்தை நசுக்குவதற்காகவே அரசு அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது.

இதனாலேயே அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை அவசரகாலச் சட்டப் பிரேரணையை பாராளுமன்றில் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக வாக்களிக்காத ஐக்கிய தேசியக் கட்சி தற்போது அதற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-08)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 'சுனாமி' நிவாரணத்தில் மோசடி

# கிராம சேவகர் பதுக்கிய பொருட்களை பொது மக்கள் கைப்பற்றி ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

பொதுமக்களுக்கு வழங்குவதற்கென கிராம சேவகரிடம் வழங்கப்பட்ட பொருட்களை அம்பாறையில் கிராம சேவகர் ஒருவர் அபகரித்து பதுக்கி வைத்திருந்தார்.



நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அப்பொருட்களை பொது மக்கள் கைப்பற்றியதுடன் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பனங்காட்டுக் கிராம சேவகர் பிரிவில் மக்களுக்கு வழங்குவதற்கென பல நிறுவனங்களால் கிராம சேவகரிடம் ஒரு தொகை நிவாரண பொருட்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருந்தன.

அப்பொருட்களை அபகரிக்கும நோக்கில கிராம சேவகர் தனியான ஓர் இடத்தில் பதுக்கிவைத்துள்ளார். இதனையறிந்த பொதுமக்கள் அபபொருட்களைக் கைப்பற்றியதுடன் அவற்றை பிரதேச செயலகத்திற்கு முன்னால் காட்சிப்படுத்தி நீதி கோரி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது சம்பந்தமாக பொது மக்களிடம் வினவியபோது புவனேந்திரன் எனும் கிராம சேவகர் பொருட்களைக் கையகப்படுத்தி பனங்காட்டிலமறைத்து வைதிருந்தார் என்றும் இப்பொருட்களின் பொதிகளில சக்தி நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் பொலிஸ் வந்து இதற்கான நியாயத்தை தமக்கு வழங்க வேணடும், இல்லையெனில தாங்கள தண்டனை வழங்கப் போவதாகவும் கூறினர்.

வேறு ஒரு நபர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பொருட்கள்யாருக்கு வந்ததோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பதுக்கி வைத்திருப்பதன் நோக்கம் என்ன? என கேள்வி எழுப்பினார். இக்கிராம சேவகர் பொருட்களை விற்கும் நோக்குடன் பல இடங்களில் விலை விசாரித்ததாகவும் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டதாகவும் அதற்கான நிவாரணத்தை இங்கு கோரியபோது இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், தான் அரச அதிபர், பொலிஸ், உதவி ஆணையாளர் போன்றவர்களிடம் கடிதங்களைப் பெற்றுவந்து சமர்ப்பித்தும் எது விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இவ்வாறுதான் இவர்களின் நிர்வாகம் என்றார்.

இப்பொருட்களின் கொள்ளையில் கிராம சேவகர் மாத்திரமன்றி பிரதேச செயலாளருக்கும் உடந்தையிருக்க வேண்டும எனவும் பொது மக்கள் கூறியுள்ளனர்.

இது சமபந்தமாக ஆலையடி வேம்பு பிரதேச செயலக உத்தியோகத்தர் தெரிவிக்கையில்.

பொலிஸாருக்கு அறிவித்து அவர்களை இச்சம்பவத்தினை கவனிக்குமாறு சொல்வோம். அவர்கள் அதற்கான விசாரணைகளை மேற்கொளளட்டும் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். (ந-4)

## வவு.இல் இளைஞர்கள் கைது

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை தமிழ் இளைஞர்களபலர் கைது செய் யப்பட்டுள்ளனர். வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவொன்றே இவ் இளைஞர்களைக் கைதுசெய்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெறறோர்கள் வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாகச் சென்று தமது பிள்ளைகள் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்ன என வினாவினர்.

வதிகளில்செல்லும்பெண்களை கேலி செய்வது, தீய பழக்க வழக்கங்களில் ஈடுபடுவது தொடர்பாகவே தாம் இவ இளைஞர்களைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித-மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் இன்று மு.ப 10.00 மணிக்கு தலைவி சகோதரி வைலற் இம்மானுவேல் தலைமையில் மறைக்கல்வி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

## அரச அதிபர் - கி. உ. சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸுக்கும் வடக்கு-கிழக்கு கிராம சேவை உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த 17 ஆம் திகதி விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் சில முக்கிய தீர்மானங்களும் எடுக்கப் பட்டன.

- அரச சுற்று நிருபத்துக்கமைய கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும்வரை எதுவித காரணமுமின்றி இடமாற்றம் செய்வதனைத் தவிர்த்தல்.
- திங்கள், வியாழன், சனி ஆகிய தினங்களில் கட்டாயம் அலுவலகத்தில் நிற்க வேண்டும். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் வெளிக்கள வேலைகள் இல்லாவிட்டால் அலுவலகத்தில் இருந்து கடமை புரியவேண்டும்.
- சேவையில் ஈடுபடும்போது சீருடை, இலச்சினை ஆகியவற்றுடன் கடமை புரியவேண்டும்.
- சீருடை, காகிதாதிகள் என்பனவற்றின் கொடுப்பனவுகளை பற்றுச் சீட்டு சமர்ப்பித்து பணமாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்தல்.
- அலுவலக தளபாடங்கள், பெயர்ப்பலகை, விளம்பரப்பலகை என்பன தேவைப்படுவோரின் விபரத்தை சங்கத்தின் மூலம் சேகரித்து உடன் சமர்ப்பித்தல்.
- 95/35 இலக்க சுற்று நிருபத்திற்கமைய 5 மாத நிலுவைப் பணத்தை வழங்குவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் நிதியைப் பெற்று விரைவில் வழங்குதல் (சுற்று நிருபம் சங்கத்தினால் வழங்கப்பட்டது)
- அரசின் 1987.11.12 ந் திகதிய **CG/PN/PB/** 8 இலக்க சுற்று நிருபத்திற்கமைய 1995.06.01 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படாத புனர் வாழ்வுக் கடமைகளில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவை 2005 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து வழங்குவதாகவும், நிலுவைப் பணத்தை புனர்வாழ்வு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் வழங்குவதெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- தீவகத்தைச் சேர்ந்த 16 கிராம உத்தியோகத்தர்களின் பின் தள்ளப்பட்ட நியமனத்தை அறிக்கையைப் பெற்றபின் 1994.08.01 ந் திகதி முதல் நியமனததை உறுதிப்படுத்த அமைச்சின செயலாளருக்கு சிபார்சு செய்தல்.
- கிராம உத்தியோகத்தர்களின் கடமைகளில் சிலவற்றை ஒரு சில பிரதேச செயலர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதைச் சுட்டிக்காட்டிய போது அதனை நிறுத்துவதற்கு ஆவன செய்தல், அத்துடன் கிராம உத்தியோகத்தர்களின் பகுதி நாட் கூட்டங்களில் நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர்கள் சமுர்ததி உத்தியோகத்தர்களையும் சேர்த்து நடாத்துவதால் முரணபாடுகள் ஏற்படுவதனால் வெவ்வேறு தினங்களில் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல்.
- சில பிரதேச செயலாளர்கள் தமக்குக் கீழ் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர்களை தரக்குறைவாக பகுதி நாட்கூட்டங்களை நடாத்துவதைத் தவிர்த்தல்.
- கிராம உத்தியோகத்தர்களின் பதிற்கடமை வேதனத்தை மாதாந்தம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
- 2005 ஆம் ஆண்டிற்கான தினக் குறிப்பேட்டுப் புத்தகம் வவுனியாக் கச்சேரியில் இருப்பதாகவும், அவற்றை உடன் பெற்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல். ஆகியனவே இந்தத் தீர்மானங்களாகும். (க)

## இராசி பலன்

27.02.2005
மாசி 15, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 01.14 மணிவரை
அத்தம் பிற்பகல் 5.40 மணிவரை
இராகுகாலம் 4.58 - 6.28 மணிவரை
சுபநேரம் 9.28 - 10.58 மணிவரை
அமிர்தசித்தம்
சங்கட கர சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, போசன சுகம், உறவினர் உதவி; காரிய அனுகூலம். |
| இடபம் | அஜீரண ரோகம், மனக்கவலை, சொத்துப் பிணக்கு, காரிய தாமதம். |
| மிதுனம் | ஆரோக்கியக் குறைவு, கற்பனை மிகுதி, தனவிரயம், தெய்வசிந்தை. |
| கடகம் | உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, விருந்துபசாரம், தேகநலன். |
| சிங்கம் | காரிய இடையூறு, எதிர்பாராத நன்மை, சுபசெலவு, வீண் மனஸ்தாபம். |
| கன்னி | நண்பர்கள் உதவி, தெய்வசிந்தை, தொழில் முயற்சி, ஆலோசனை. |
| துலாம் | பிறருக்கு உதவி செய்தல், அமைதிக் குறைவு, நல்ல முயற்சி, தன விரயம். |
| விருச்சிகம் | கலந்துரையாடல், தொழில் சிந்தை, முயற்சி கைகூடும், சகோதரர் உதவி. |
| தனுசு | நல்ல வரவேற்பு, காரிய சிந்தை, போசன நன்மை, மரியாதை. |
| மகரம் | தேசாந்திர வாசம், தொழில் அபிவிருத்தி, கந்தைவழி உறவு, திடீர் பயணமுயற்சி. |
| கும்பம் | சரீர பீடை, வேலைச்சுமை, நண்பர்கள் விரோதம், பொருள் விரயம். |
| மீனம் | புதிய விடயம், குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தேகநலன். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது
—வளவன்

## உயிரிழப்புக்கள் குறித்த விபரங்களை துரிதமாக பதிவு செய்ய வேண்டும்

### சதாசிவ ஐயர் வேண்டுகோள்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தொடர்பான விபரங்களை மூன்று மாத காலத்திற்குள் பதிவு செய்து கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட இறப்புக்களை மூன்று மாதத்திற்குள் பதியாது தாமதித்தால், பின்னர் அது காலம் கடந்த பதிவு எனக்கருதி இறப்புக்களைப் பதிவதில் சிக்கல் ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது சுனாமியினால் இறந்தவர்களுக்கான மரணசான்றுப் பத்திரங்களை வழங்குவதிலேயே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

முன்பு ஒருவர் காணாமல் போனால் ஏழு வருடங்களின் பின்னரே நீதிமன்றம் மூலம் விண்ணப்பித்து மரணச் சான்றிதழைப் பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

## திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த 25 ஆம் திகதி பகல் வேளையில் பெறுமதிமிக்க நகைகளும் உடுபுடவைகளும் களவாடப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டுக்காரர் வீட்டில் இல்லாததை அறிந்த திருடர்கள் கதவை உடைத்து திருடியுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தனர். (ப-51)

## 'பன்முகப் பார்வை' நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட அல்வை முருகேசனார் எழுதிய பனமுகப்பார்வை கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டுவிழா இன்று மு.ப.9.00 மணிக்கு ஆவரங்கால் ஆனந்தகான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் வே.இளையகுட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுகவுரையை மு.அநாதரட்சகனும், நூல்வெளியீட்டு உரையை தெணியானும் மதிப்பீட்டு உரைகளை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா, முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புரைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பராளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், கி.சிவனேசன், சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (க)

## அவசர நிதியுதவிகளை வழங்க ஆசிய அபி. வங்கி அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு முதலாவது அவசர நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் 7 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கே ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவிகளை வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி மற்றும் உலக வங்கி என்பன கூட்டாக நடாத்திய ஆரம்பக்கட்ட ஆய்வுகளுக்கு அமையவே இந்தக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் வருமானம் குறைந்த மக்களுக்கு இந்தக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சுனாமியின் பின்னர் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.(ற-8)

## கையொப்பம் இடுக

பருத்தித்துறை நீதிமன்றில் 2004 ஆம ஆண்டு ஆடி மாதத்திற்கு முன்னர் பிணைப்பணம் மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்து இதுவரை தேவைப் பட்டியல் படிவத்தில் கையொப்பம் இடாதவர்கள் உடனடியாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற அலுவலகத்தில் சமுகமளித்து கையொப்பமிடுமாறு நீதிமன்றப் பதிவாளர் வ.மார்க்கண்டு அறிவித்துள்ளார். (ப-101)

# மக்கள் மனதில் நிறைந்திருக்கும்

# வடஅல்வை முருகேசனார்



ஒரு சமுதாயத்தின முன்னேற்றத திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை உந்து சக்தியாக விளங்குவது கல்வி யேயாகும். மனித உரிமைகள் மறுக்கப் பட்ட காலத்தில் அமரர் க.மு. பல இடர்களுக்கு மத்தியில் கல்வியைக் கற்றார். கிறிஸ்தவ மிசனரிமாரின் உதவியினாலேயே அவர் கல்வியைத தொடர முடிந்தது.

இதனால்தான் அமரர் க.மு. தன் ஆசிரியப் பணியை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆரம்பித்தார். அங்கு நீண்டகாலமாகத் தன் சேவையினைத் தொடர்ந்தார். ஒரு கையில் ஐந்து விரல்கள் இருப்பது போல் தேவரையாளி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு முக்கியமான ஆசிரியர்களைச் சேர்ந்த 5 பேர் உறு துணையாய் இருந்தனர். அவர்களுள் அமரர் க.முவும் ஒருவராவர்.

ஆயிரம் அன்ன சத்திரங்கள் அமைப்பதைவிட ஒரு கல்விச்சாலை அமைப்பதே மேன்மையானதாகும் என்ற கூற்றுக்கிணங்க அமரர் க.மு இருபாடசாலைகளின் ஸ்தாபகரானார். ஸ்ரீலங்கா வித்தியாசாலையை அமைக்க அவர் பல துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தார். இங்கு அமரர் க.மு ஒரு ஆசிரியராகப் பணியாற்றி, கவிஞர் மு.செல்லையாவை அதன் அதிபராக்கினார். அதன்பின் யா/புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலையையும் அவ்வூர் மகக்ளின் பங்களிப்போடு உருவாக்கி அதன் அதிபரானார்.

1954இல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் அமரர் க.மு உபதலைவராகக் கடமையாற்றினார். இந்த மகாசபைக்காக அமரர் ஆ.ம.செயுடன் சேர்ந்து கஷ்டமான நிலையிலும் பணத்தைச் செலவழித்து இந்த அமைப்பை வளர்க்கப்பாடுபட்டார்.

இறுதியில் இடதுசாரிகளின் தலையீட்டினால் இந்த மகாசபையை விட்டு விலகி சமூகசேவா சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

அமரர் க.மு வடகிளைத் தமிழரசுக் கட்சியிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்டார்.

மனிதனின் வாழ்க்கை என்பது பஞ்சணைப்படுக்கையல்ல. வாழ்க்கை என்பது கற்களும், முட்களும் நிறைந்த கரடுமுறடான பாதையாகும. அமரர் க.மு வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்தித்தார். அவர் முதல் மனைவி லஷ்மியை இழந்தார். இளமைக்காலத்தில் இந்த இழப்பீடுகளுக்கு மத்தியிலும் தன் சமூகப் பணியில் தொடர்ந்து செயற்பட்டார். அதன் பின் கமலவேணியை திருமணம் செய்து நீண்டகாலம் பிள்ளைகள் இல்லாமல் இருந்து 3 ஆண்குழந்தைகளுக்குத் தந்தையானார்.

**தி. வரதராஜன்**
**கிராமசேவையாளர்**

அவர் கதர் உடுத்தவராக மிளிர்ந்தாலும், அவருடைய உள்ளத்தில் வீரம் செறிந்து காணப்பட்டது. அறிஞர் அண்ணா குறிப்பிட்டது போல் எதையும் தாங்கும் இதயம் உள்ளவராக விளங்கினார். வடமராட்சியில் 1944ஆம் ஆண்டு கிராமசபைத தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவர் புத்தூரில் வாழ்ந்தபோது ஒரு நிரந்தர விவசாயியாக மாறினார்.

கலை கலாச்சாரத்திலும் அமரர் க.மு சிறந்தவராகவே மிளிர்ந்தார். இதற்கு உதாரணமாகத் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களையும், கலை நிகழ்வுகளையும் குறிப்பிடலாம். அங்கு முற்றிலும் மாணவிகளையே தன் நாடகங்களில் நடிக்கச்செய்தார். அவற்றில் சகுந்தலை, மார்க்கண்டேயா ஆகிய நாடகங்களைக் குறிப்பிடலாம். அமரர் க.முவின் நெறியாள்கையில் நடிக்கப்பட்ட இந்நாடகங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அமரர் க.மு 92ஆவது வயதில் உணர்ச்சியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டா. ஆனால் அவர் விவசாயஞ் செய்த மண்வெட்டியைக் கைவிடவில்லை.

2005.01.02ஆம் திகதி அவர் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு 94 ஆவது வயதில் சிவப்பேறு பெற்றார்.

இந்தத் தரணியில் இவர் ஸ்தாபித்த இரு பாடசாலைகளும் வரலாற்றுக் குறியீடாக மிளிரப் போகின்றன. அவர் மக்கள் உள்ளங்களில் நிறைந்து வாழ்வார்.

# நீர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர்கழகப் பொதுக் கூடடமும் நிர்வாகிகள் தெரிவும் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது.

அதன்படி தலைவராக இரத்தின கோபால் ஜெயராசாவும், உபதலைவராக இரத்தினலிங்கம் ஜெயசேகரனும்; செயலாளராக சண்முகசுந்தரம் சிவகுமாரனும், உபசெயலாளராக இர்த்தினம் சிவலிங்கமும் பொருளாளராக தம்பிராசா குணசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.ஜனக்குமார், ப.சிவபாஸ்கரன், த.சறகுணராசா, க.மகாலிங்கம், க.சிவநேசன், ச.தர்மதாஸ், கு.கங்கைவேணியன், த.குகனேசன், கா.நித்தியானந்தன், அ.ஜெயச்சந்திரன், தி.சிவதாசன, அ.ஸ்ரீபாஸ்கரன், தி.இராசேந்திரன், சி.பரமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# முகாம் நிர்மாணப்பணிகள் எண்பது சதவீதம் பூர்த்தி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்டுவரும் இடைத தங்கல் முகாம்களில் 80 வதமானவையின் பணிகள் பூர்த்தியடைந்து விட்டன.

மிகுதி வேலைகளும் பூர்த்தியடைந்தவுடன், மக்கள் உடனடியாகவே அவற்றில் குடியமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் உள்ள மக்களுக்காக இடைத்தங்கல் முகாம் அமைக்கும் வேலை இதுவரை ஆரம்பிக்கப் படாமையால் இந்த மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

ஏனைய பகுதிகளில் அமைப்பது போன்று தங்களுக்கும் விரைவாக இடைத்தங்கல் முகாம்கள் அமைத்துத தரப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-43)

# அதிரடிப்படையின் செயலுக்கு ஜெயா எம்.பி கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் வதியும் பெண்கள் மற்றும் மக்களை ஸ்ரீலங்கா விஷேட அதிரடிப்படையினர் துன்புறுத்துவது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான செயல் நாகரீகமற்றது எனத் தெரிவித்திருக்கும் ஜெயானந்தமூர்த்தி, படையினரின் இந்நடவடிக்கை குறித்து உரிய அதிகாரிகள் மற்றும் போர்நிறுத்தக கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாகவும் தெரிவிததுள்ளார். (ற)

# வெள்ளையனே வெளியேறு கோஷத்தால் அம்டா கனேடிய மருத்துவக் குழு கவலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச முஸ்லிம் மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை மருதமுனையில் இருந்து சாய்ந்தமருது வரையுமான பிரதான வீதியில் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது 'ஏற்று ஏற்று வெள்ளயனை வெளியேற்று' என்று உரத்த குரலில் கோஷமெழுப்பிச் சென்றுள்ளமை கவலை தரும் விடயமாகும்.

இவ்வாறு ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிரதேச மக்களுக்கு குறிப்பாக ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மருத்துவ உதவியளித்து வரும் 'அம்டா' கனேடிய மருத்துவ குழுவின் இணைப்பாளர் அன்ரனி றிச்சட் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட முஸ்லிம் மீனவ மக்கள் 'வெள்ளையனே வெளியேறு' என்று கூறியுள்ள விடயம் கனேடிய மருத்துவக் குழுவில் அங்கம் வகிக்கும வைத்திய நிபுணர்களுக்கு உளரீதியான பாதிப்புக்களை உண்டு பண்ணியுள்ளது.

கனேடிய மருத்துவக் குழுவினர் உள்நோக்கம் எதுவுமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வைத்திய உதவிகளை நல்கவேண்டும் என்ற நல்நோக்கத்துடனேயே இலங்கை மண்ணுக்கு வருகைதந்தனர் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

# மோதல்

(கொழும்பு)

தலவாக்கல நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலொன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் இணைப்புச் செயலாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக தலவாக்கல நகரசபை உதவித் தலைவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-8)


தில்லையம்பதியாள் துணை

## ஓராண்டு நினைவஞ்சலி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அமரர் திரு
**கந்தையா இராசகுமார் (செட்டி)**



மண்ணில் மலராக
29.03.1966

விண்ணில் உறவாக
10.03.2004

திதி
சங்கடஹர சதுர்த்தி
திகதி 27.02.2005

**நினைவுப்பா**

நெஞ்சம் குமுறுகின்றோம் நெடியநின் பிரிவினிலே
தஞ்சமின்றி வாழ்கின்றோம் தவியாய்த் தவிக்கின்றோம்
அஞ்சலென்று நமக்காறுதல் கூற இங்கு யாருமில்லை
நெஞ்சத்தால் எண்ணுகின்றோம் ஓராண்டு நினைவிலின்று.

*மேல் நிலை அருள்வாள் ஓம் சக்தி ஓம்*

அன்னை பராசக்தி ஓம் சக்தி ஓம்
இம்மை நலம் தந்தாள் ஓம் சக்தி ஓம்
உமையவள் திரிசூலி ஓம் சக்தி ஓம்
எம்மையும் ஆட்கொண்டாள் ஓம் சக்தி ஓம்
ஐஸ்வரிய பூரணி ஓம் சக்தி ஓம்
ஔவியம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பார்தவக்குமரி ஓம் சக்தி ஓம்

ஆதி சிவசக்தி ஓம் சக்தி ஓம்
ஈந்தவருக்கு அருள்வாய் ஓம் சக்தி ஓம்
ஊழித் தவக்காளி ஓம் சக்தி ஓம்
ஏற்றங்கள் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
ஒருமையில் ஓங்கும் ஓம் சக்தி ஓம்
ஆனந்தம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பார்வையில் அருள்வாள் ஓம் சக்தி ஓம்

சிவகாமித் தாயே ஓம் சக்தி ஓம்

தில்லையம்பதி,
கோண்டாவில். T.P. 0602212841

-குடும்பத்தினர்

## ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து இல்லாதோரின்

# எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியா எதிர்ப்பு

(நியூயோர்க்)

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் அல்லாத பிரிவில்மட்டும் விரிவாக்கம் செய்யும் யோசனையை இந்தியா நிராகரித்து விட்டது.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் சாதாரண முறையில் நடைபெற்ற விவாதத்தின்போது இந்தியத் தூதர் நிருபம் சென் இதைத் தெரிவித்தார்.

ஐநாவை சீரமைப்பது தொடர்பான உயர்நிலைக் குழுவின் அறிக்கை குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

நிருபம் சென் கூறியதாவது,

ஐ.நா பாதுகாப்பு மன்றத்தில் வளரும் நாடுகளுக்கு நிரந்தர இடமளிக்கவேண்டும். சர்வதேச பொருளாதார நடைமுறைகளைக் கட்டுப்படுத்தவும் சீர்திருத்தங்களை ஊக்குவிக்கவும், பலவீனமான நாடுகளைப் பாதுகாக்கவும் வளரும் நாடுகளுக்கு நிரந்தர இடமளிப்பது அவசியம்.


வீட்டோ அதிகாரம் தராமல் நிரந்தர அந்தஸ்து மட்டுமே அளிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வீட்டோ (ரத்து) அந்தஸ்துள்ள நாடுகளுக்குச் சமமாக, அந்த அந்தஸ்தில்லாத நாடுகளைக் கருத முடியாது.

வளரும் நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளித்து, ஐ.நாவை மறுசீரமைப்பது முக்கியம் என்றார். (ற)



சங்கரராமன் கொலை வழக்கில் கைதாகி பிணையில் விடுதலையாயிருக்கும் காஞ்சி சங்கராமடாதிபதிகள் ஜெயேந்திரரும், விஜயேந்திரரும் நேற்றுமுன்தினம் காஞ்சிபுரம் நீதிமன்றத்திற்குச் சென்றனர். தனித்தனியே இரு வான்களில் வந்த இருவரும் நீதிமன்ற வளாகத்தில் சந்தித்துக்கொண்ட காட்சி.



மகாபலிபுரம் கடற்கரையிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கடலுக்குள் புதைந்துள்ள வரலாற்றுப் புராதன சின்னங்கள் குறித்து இந்திய தொல்லியல் துறையும், கப்பற்படையும் இணைநது ஆய்வு நடத்திவருகின்றன. கடலுக்கு அடியில் கட்டடம் போன்று காணப்படும் பகுதியில் ஆய்வு செய்வதையும், நீச்சல் வீரர் ஒருவர் கடல் அடியில் கிடைத்த குவளையை வெியே எடுத்து வருவதையும் படங்களில் காண்க.

## நைஜீரியாவில் எண்ணெய் திருட்டு;

# இராணுவத்தினரின் தாக்குதலில் 14 பேர் பலி; பலர் படுகாயம்

(ஓடியோமா)

நைஜீரியாவில் எண்ணெய் உற்பத்திப் பகுதியில் இராணுவத் தன் நடத்திய அதிரடி சோதணையில 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நைஜீரியாவில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெய் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலக அளவில் எண்ணெய் ஏற்றுமதியில் எட்டாவது இடத்தை நைஜீரியா பிடித்துள்ளது.

அமெரிக்காவுக்கு எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஐந்தாவது இடத்தில் இந்நாடு உள்ளது. எண்ணெய் உற்பத்திப் பகுதியில் தீவிரவாதிகள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

மேலும் கச்சா எண்ணெய்யையும் திருடிச்செல்கின்றனர்.

இந்நிலையில் கடலோரக் கிராமமான நிகேர் பகுதியில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் அதிரடிச் சோதனை நடத்தினர். அப்போது 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். இதை இராணுவ அதிகாரிகள் மறுத்தாலும், அப்பாவி மக்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்துகின்றனர் என்று உள்ளூர் கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இராணுவம் -தீவிரவாதிகள் மோதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாயின. இடிபாடுகளில் சிக்கிப் பலர் உயிரிழந்திருக்கலாம் என்றும், அஞ்சப்படுகிறது. (ற)

# நாயை கடித்தவருக்கு சிறை

(லண்டன்)

ஸ்காட்லாந்தில் நாயைக் கடித்துக் குதறி, எட்டி உதைத்தவர் விலங்குகள் வதைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஸ்காட்லாந்து தலைநகர் எடின்பர்க்கில் மக்கள் கூட்டம் நிறைந்த ஷாப்பிங் சென்டர் அங்கு 8 வயது நாயுடன் டேவிட் டாட் (34) என்பவர் வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பார்வை இல்லை. துணைக்கு நாய்தான் வந்தது. என்ன நடந்தது. ஏது நடந்தது என்பது தெரியாது. திடீரென நாயைக் கடித்து குதறினார். நாய் வலி தாங்க முடியாமல் குரைத்தது. திருப்பக் கடிக்கவில்லை. இதுதான் நாயின் விசுவாசம்!

அத்துடன் நிற்காமல், நாயை எட்டி உதைத்தார். அது சாலையின் அந்தப் பக்கம் போய் விழுந்தது. இதைப் பார்த்த மக்கள் பொலிஸுக்கு உடனடியாகத் தகவல்கொடுத்தனர். டேவிட் கைது செய்யப்பட்டார். விலங்குகள் வதை தடுப்புச்சட்டம், அமைதியை சீர்குலைத்தல் போன்ற சட்டப்பிரிவுகளின் கீழ் டேவிட் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது (ற)



இந்தியா சென்றுள்ள ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீட் கர்சாய் புதுடில்லியில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடாத்திய போது எடுக்கப்பட்ட படம்.

### கின்னஸ் சாதனைக்காக 20 மீற்றர் நீளச்சுருட்டு

ஹவானாவில் நடந்த ஒரு சர்வதேச விழாவில் ஜோஸ் கேஸ்டெல்லர் கியூட்டோ (வயது 61) என்பவர் 20 மீற்றர் நள சுருட்டைத் தயாரித்தார்.

இதற்காக 9 கிலோ புகையிலையைப் பயன்படுத்தியுள்ளார்.

160 ஆண்டுகள் பிரசித்தி பெற்ற பர்டாகாஸ் ஆலை புகையிலை இந்த சுருட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (க)

### நோபல் அமைதிப் பரிசுக்கு 199 விண்ணப்பங்கள்

(ஒஸ்லோ)

இந்த ஆண்டு நோபல் அமைதிப் பரிசுக்காக 199 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் கொலின் பவெல், சிதார் இசைக்கலைஞர் ரவிசங்கர் உள்ளிட்ட 163 பெயர்கள் பரிசீனையில் உள்ளன. 36 நிறுவனங்களின் பெயர்களும் பரிசீலணைப் பட்டியலில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)


# முன்பிணை மனுவிசாரணை முதலாம் திகதிக்கு ஒத்திவைப்பு

(செங்கல்பட்டு)

சங்கரமடம் சட்டத்தரணிகள் பிணை முன் மனு மீதான விசாரணையை மார்ச் முதலாம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். சங்கரராமன் கொலை வழக்கில் அப்ரூவான ரவிசுப்பிரமணியத்தின் மனைவி சித்ரா, சிவகாஞ்சி பொலிஸ் நிலையத்தில் கடந்த 19ஆம் திகதி புகார் மனு ஒன்று அளித்தார்.

ஜெயேந்திரர் அவரது சட்டத்தரணிகள் சண்முகம், தியாகராஜன் ஆகியோர் தூண்டுதலின் பேரில் சட்டத்தரணிகள் நசீராபானு, ரேவதி ஆகியோர் சிறையில் ரவிசுப்பிரமணியத்தை சந்தித்து மிரட்டி உள்ளனர். இதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்என குறிப்பிடப்பட்டிருந்தது. மனு மீது வழ்க்குப் பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சட்டத்தரணிகளாக சண்முகம், தியாகராஜன் மற்றும் பெண் சட்டத்தரணி ரேவதி ஆகியோர் முன்பிணை கோரி செங்கல்ப்பட்டு செசன்ஸ் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

அம்மனு நீதிபதி அக்பர் அலி முன் விசாரணைக்கு வந்தது. விசாரணையை எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)



மைசூரில் உள்ள உயிரியல் பூங்கா ஒன்றில் பராமரிக்கப்பட்டு வரும் ஒட்டகச் சிவிங்கியான கிருஷ்ணராஜாவிற்கு, அடிவயிற்றில் சிறிய பிரச்சினை ஏற்பட்டது. இதற்கு பெங்களூரில் இருந்து வந்திருந்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தனர். சிகிச்சை முடிந்து கிருஷ்ணராஜா தற்போது குணமடைந்து வருகிறது.

# பாப்பரசருக்கு சத்திர சிகிச்சை

(வத்திகான்)

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு 84 வயது ஆகிறது. பல ஆண்டுகளாக உடல் பலவீனத்துடன் இருக்கிறார்.

இம்மாதம் தொடக்கத்தில் கடுமையான குளிர்காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக ரோமில உள்ள ஜெல்லி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் 10 நாள் சிகிச்சைக்குப் பின்னர் கடந்த 10ஆம் திகதி வத்திகான் திரும்பினார். அவரது உடல்நிலை தேறி வருவதாக வத்திகான் அறிவித்தது.

கடந்த புதன்கிழமை வழக்கம் போல் போப் ஆண்டவர் பக்தர்களுக்கு தரிசனம் அளித்து, ஆசியுரை வழங்குவதாக இருந்தார். இதற்காக அவர் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் உள்ள போப் ஆண்டவர் அரண்மனையின் ஜன்னல் வழியாக பக்தர்களுக்கு தரிசனம் தரத் தயாராக இருந்தார்.

ஆனால் திடீரென கடுமையான புயலுடன் மழை கொட்டியது. இதனால் போப் ஆண்டவரின் உதவியாளர்கள் பக்தர்களை பெரிய டெலிவிஷன் திரையுடன் கூடிய கலையரங்கத்துக்குள் அனுப்பிவைத்தனர்.

அங்கு போப் ஆண்டவர் பக்தர்களுக்கு சுமார் 2 மணிநேரம் தரிசனம் தந்தார். முன்னதாக அவரது தாய்மொழியான போலந்து மொழி உட்பட 6 மொழிகளில் பக்தர்களுக்கு அருளுரை வழங்கினார். அப்போது அவரது குரல் கரகரத்து, கம்மியாக ஒலித்தது. ஆனால் பார்ப்பதற்கு எப்போதும்போல் அவர் காணப்பட்டார்.

அவரது குரல் கரகரத்ததைத் தொடர்ந்து மீண்டும் அவர் ரோமில் உள்ள ஜெமில்லி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவருக்கு புளூ காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் இருப்பது தெரியவந்தது. இதனால் சிறப்பு சிகிச்சைக்காகவும், உடல் பரிசோதனைக்காகவும், அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்று வத்திகான் செய்தித் தொடர்பாளர் ஜோகுயின் நவர்ரோவால்ஸ் தெரிவித்தார்.

இந்நிலையில் அவருக்கு தொண்டையில் 30 நிமிட நேர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூச்சு விடுவதற்கு வசதியாகவே தொண்டையில் சத்திர சிகிச்சையின்போது குழாய் பொருத்தப்பட்டுள்ளது. (ற)

### உலக தரிசனம்

### பாக்.இல் பனிப்பொழிவு இதுவரை 346 பேர் பலி

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தானிலும் இப்போது கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள தோபாகாகர் பகுதிகளில் சுமார் 2000க்கும் மேற்பட்டோர் பனிப்பொழிவில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

இதுவரை 346 பேர் பனிப்பொழிவில் சிக்கிப் பலியாகியுள்ளனர். உறை பனியில் சிக்கி உள்ளவர்களை மீட்க 9000 இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)




## சிம்புவின் புது யுக்தி



சிறுவயதிலேயே சினிமாவின் சகல நுணுக்கங்களையும் தெரிந்துகொண்ட சிம்பு அந்தத் தைரியத்தில தன் சம்பள விசயத்தில் ஒரு புது யுக்தியைக் கடைப்பிடிக்க விரும்புகிறார்.

அதாவது 5 கோடி ரூபாய் அவரிடம் கொடுத்தால் நடிக, நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் என அனைவருக்கும் சம்பளம் கொடுத்து விட்டு மீதமுள்ளதை தன் சம்பளமாக எடுத்துக்கொள வாராம்

சிம்புவின் இந்தச் சம்பள யுக்தியை கோலிவுட்டில் எடுபடுமா? பொருத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## த்ரிஷாவின் வெள்ளை மாளிகை

தெலுங்கு பட உலகில் த்ரிஷாவின் மார்க்கெட் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. குறிப்பாக பிரபுதேவா இயக் கத்தில் அவர் நடித்த படதகின் அமோக வெறறிக்குபபிறகு அவர் 80 லட்சம் சம்பளம் வாங்கிவருகிறாராம். பணப்புழக்கம் அதிகரித்துள்ளதால் த்ரிஷா சென்னையில் ஆடம்பர பங்களா ஒன்று வாங்கியுள்ளார். வெள்ளை நிறத்தில் உள்ள இந்த வெள்ளை மாளிகையில், த்ரிஷா விரைவில் குடியேறுவாராம்.

## தெலுங்குக்கு போகிறது சுக்ரன்!

டைரக்டர் எஸ்.ஏ சந்திரசேகரன் இயக்கிய 'சுக்ரன்' படம் அண்மையில் வெளியாகியது.

இப்படத்தில் தனது மகன் ரவிகிருஷ்ணா கதாநாயகனாக நடித்திருப்பதால் இப்படத்தை தயாரிப்பாளர் ஏ.எம்.ரட்ணம் விலைகொடுத்து வாங்கிவிட்டார். படத்தை தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெளியிட அவர் திட்டமிட்டுள்ளார்.

இப்படத்தில் விஜய் கவுரவ வேடத்தில் நடித்துள்ளார். ஆனால் தெலுங்கு டப்பிங் படத்தில், விஜய் நடித்த காட்சிகள் இடம்பெறாது. அவருக்குப் பதிலாக தெலுங்கில் உள்ள முன்னணி கதாநாயகன் யாரையாவது நடிக்க வைத்துப் படத்தில் இணைக்க ஏ.எம். ரட்ணம திட்டமிட்டுள்ளார்.

யாரை நடிக்க வைப்பது என்று அவர் இன்னும் முடிவு செய்யவில்லை. விஜய் நடித்த காட்சிகளைத் தவிர மற்ற அனைத்தும் அப்படியே இடம்பெறுமாம்.




## 'சச்சின்' — துடிப்பான காதல்




தயாரிப்பாளர். வீநியோகஸ்தர், தியேட்டர்காரர்கள் திருப்திதான் எனக்கு முக்கியம். 'திருப்பாச்சிக்கு' வசூல் திருப்தியாக உள்ளது. அப்படியென்றால் படம் பார்ப்பவர்களும் திருப்தியாக இருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம.

அக்ஷன் படங்கள் தொடநது பண்ணியதால் ஒரு மாறுதலுக்காக 'சச்சின்'படத்தில் நடிக்கிறேன். இது காதல்க் கதை, 'ப,வே உனக்காக', 'காதலுக்கு மரியாதை' மாதிரி மென்மையான காதல் இல்லை. ஒரு கல்லூரி மாணவனின் துடிப்பான காதல்க் கதை.

இதில் அக்ஷனும் இருக்கும் என்று 'சச்சின்' படம் பற்றிச் சொல்கிறார் விஜய்.

## ஓயாத அலைகள்!

அலைகள் ஓய்வதில்லை - கார்த்திக் -ராதா ஜோடியின் வாரிசுகளை ஜோடி சேர்த்து ஒருபடத்தை உருவாக்க இயக்குனர் மணிரத்னம் முயற்சித்து வருகிறார். கார்த்திக்கின் மகன் கௌதமையும்,ராதாவின் மகளையும் இதற்காக மேக்கப் டெஸ்ட் எடுத்து விட்டதாக தெரிவிக்கிறது மணிரத்னம் வட்டாரம்.




## கோபிகாவுக்கு எச்சரிக்கை

'தொட்டி ஜெயா' படத்துக்கு கால்ஷூட கொடுத்திருந்த கோபிகா, குறித்த திகதிகளில் நடிக்கவராமல் மலையாளப் படங்களில் நடிக்கப் போய்விட்டார்.

விளைவு, கோபிகாமீது புகார் கொடுத்து கவுன்சிலுக்கு இழுத்துவிட்டார் தயாரிப்பாளர் தாணு.

சத்யஜோதி தியாகராஜன் கவுன்சில் தலைவராகப் பொறுப்பேறறதும் விசாரணைக்கு வந்த முதல்நபர் கோபிகாதானாம்.

## கைமாறிய கதை

'அன்பே உன்வசம்' படத்தைத் தயாரிதத அழகன் தமிழ்மணியின் அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பு யார்கண்ணனுக்கு கிடைத்தது. அவரும பக்காவான ஒரு த்ரிலலா கதையை அனுமாஷ்யம் கலந்து தயார்செய்தார்.

ஆனால் படம் ஆரம்பித்த பாடில்லை இப்போது அதே கதையை 'யுகா' என்ற பெயரில இயக்குகிறாா யார்கண்ணன். படத்தில ரிசசாா்ட, சொர்ணமால்யா, சுகுமார் ஆகியோர் நடிக்கின்றார்கள்.

## ஜெயலட்...
## சிந்...

சிந்துதுலா...
என்ற படத்தில் ...
லட்சுமியின் வ...
கொண்டது என...
ஜெயலட்சுமி ...
திரர் - சொர்ண...
த்து இப்படதகி...
எழுதியிருப்பதா...
இப்படத்தி...
ரால் கற்பழிக்கப்...
அவர் சாமியாரி...
எந்தரத்தின் ...
தாக கதை அ...
சிந்துதுலா...
ஆடைகளோடு ...
தன் தங்கை ...
தில இறக்கிவி...
மட்டுமன்றி பி...
கவர்ச்சி கோத...
'அலை அடிக்கு...
பஞ்சம் ' இருக்...



'ஜி'
அஜித் - த்ரிஷா

# சுக்ரன்

## திரை விமர்சனம்



சமூக சிந்தனையுடன் கூடிய 'அக்ஷன்'படம்.

ரவி, சந்தியா இருவரும் காதலாகள். சந்தியாவின் பெற றோர் காதலை எதிாகக மோதல். ரவியின் தந்தை தாககபபட்டு வீடு நொறுக்கப்படுகிறது. சந் தியாவுடன் ரவி சென்னை ஓடுகிறான். அவன் தந்தையைக் கொல்கிறார்கள்.

காதல் ஜோடிகளைத் தீர்த்துக் கட்டும்படி ரவுடி பொலி ஸுக்குத் தகவல் வர இருவரும் பிடிபடுகிறார்கள்.

ரவியை பொய் வழக்கில் கைதுசெய்துவிட்டு சந்தியாவை பொலிஸ்அதிகாரி, நீதிபதி, மந்திரியின் மகன் மூவரும் கற்பழிக்கிறார்கள். இருவரும் செத்துவிட்டதாக எண்ணி கூவத்தில் வீசப்படுகிறார்கள். அங்கிருந்து மீளும் காதலர்கள் வாழ்க்கை வெறுத்துக் கடலில் விழுந்து சாகப்போக ஆவேசமாக சுக்ரன் ஆஜராகிறார்.

அவர்களைக் காப்பாற்றி வாழ நம்பிக்கை ஊட்டிவிட்டு மறைகிறான். சகஜ நிலைக்கு வரும் காதலர்கள் வேலையில் சேர்ந்துவாழ விரும்புகையில் மீண்டும் ரவுடி பொலிஸ் குறுக்கீடு. அவர்களிடமிருந்து தப்பி பெண் நீதிபதியிடம் அடைக்கலமாகிறார்கள். அந்த நீதிபதியும் கொல்லப்பட பதட்டம்... விபச்சாரி என்ற பொய் வழக்குடன் சந்தியாவை கோர்ட்டில் நிறுத்த ரவி வெறியாகிறான்.

நீதிபதி, மந்திரியின் மகன், பொலிஸ் அதிகாரி மூவரையும் கோர்ட்டுக்கு உள்ளே சுட்டுக்கொன்றுவிட்டுக் காதலியடன் தப்பியோடுகிறான். பொலிஸ் விரட்ட... மீண்டும் சுக்ரன்.

காதல் ஜோடிக்கு அடைக்கலம் கொடுத்து ஆபத்தில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவது கிளைமாக்ஸ்...



எஸ்.ஏ.சந்திரசேகரன் நீண்ட இடைவெளிக்குப் பின் இயக்கிய 'ஜெட்' வேகப்படம்.

ரவியாக வரும் ரவிகிருஷ்ணா பாத்திரத்துக்குக் கச்சிதம். காதல உணர்வு, தந்தை பாசம் வெளிப்படுத்துவதில் யதார்த்தம். தந்தை கொல்லப்படுவதை ரெலிபோன் உரையாடலிலேயே கேட்டு அலறுவது உருக்கம். கற்பழிக்கப்பட்ட காதலி சாகத் துணியும் போது நானும் உன்னோடு செத்திடுறேன் என்று அவள் கையைப் பிடித்துக் கடலுக்குள் புகுவது அனுதாபம். கோர்ட்டில் மோதுவது அனல்.

சுக்ரனாக வரும் விஜய்யின் அறிமுகமே அமர்க்களம். ரவுடிகள் துப்பாக்கியால் சுடப் பாயும் குண்டுகளில் இருந்து குனிந்து லாவகமாகத் தப்புவது கைதட்டல்.

நால்வரைக் கொன்றுவிட்டுத் தப்பிவரும் ரவிகிருஷ்ணாவையும் காதலியையும் சுமோவில் அழைத்துக்கொண்டு போய் வழியில் குறுக்கிடும் பொலிஸ் கண்ணில் மண்தூவி பிணவண்டியில் ஏற்றி அனுப்புவது திக்திக்...

ரவுடிகளுடன மோதல், குடி என வரும் விஜய் வக்கீலாக மாறுவது திருப்பம்.

கோர்ட்டில் அரசு வக்கீலை எதிர்த்து வாதாடி திறமை, புத்திசாலித்தனத்தால் ரவிக்கிருஷ்ணா குற்றவாளியல்ல என்று விடுவிக்க வைப்பது சபாஷ்...

சந்தியாவாக வரும் நதிஷா அழகுப் பதுமை. நால்வரிடம் கற்பை இழந்து துடிக்கையில் அனுதாபத்தை அள்ளுகிறார்.

கடைசிவரை விறுவிறுப்பான திரைக்கதை அமைத்து ஒளிர்கிறார் இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகரன். அடுத்து என்ன என்று பதட்டப்படுத்தும் வகையில் காட்சிகளைத தொகுததுளளார்.

இளமை, சமூக சாடல், கிளுகிளுப்பு. அக்ஷன் என விறுவிறுப்பான கலவையாக கொடுத்துள்ளார். நளினி மிரட்டல் வில்லி. பெப்சி விஜயன் ஶ்ரீமன், ராஜன் பி.தேவ் பயமுறுத்தல்.

விஜயகுமார், நாசர், எம்.எஸ்.பாஸ்கர், சீதா அகியோரும் வருகின்றனர்.

'காத்திக்கடி, போத்திக்கடி' பாடலில் ரம்பாவின் நடனம் கிளுகிளுப்பு. 'துள்ளுவதோ இளமை' பாட்டுக்கு ரகசியா சூடேற்றுகிறார்.

விஜய் அண்டனி இசையில் பாடல்கள் தாளரகம்.

*சுக்ரன் மீண்டும் சட்டம் ஒரு இருட்டு*

# தலைப்புதான் கவர்ச்சி - ஶ்ரீமன்



'ஸாரி எனக்கு கலயாணமாயிடுசசி' எனற படததில் கதாநாயகனாக நடிக்கும் ஶ்ரீமன் அந்தப் படத்தைப் பற்றி நிருபர்க ளிடம் கூறியதாவது:-

'ஸாரி எனக்கு கல்யாணமாயிடுச்சி' என்ற படத்தின் தலைப்பு ஒரு கவர்ச்சிக்காக வைக்கப பட்டதுதான். மற்றப்படி படத்தில் அன்றாடம் நடக்கும் சம்பவங்கள்தான் இருக்கும். கடவுள் அருளால் கடந்த பத்து வருடமாகத் தொடர்ந்து நடிச்சிட்டு இருக்கிறேன்.

ஒருநாள் கூட வீட்டில் சும்மா இருக்கக்கூடாது என்பது என் கொள்கை. 'பட்டைய கிளப்பு', 'சதி', 'சாவித்திரி', 'லேடிஸ டைலர்', '786 ஒக்க பிரேமகதா' ஆகியவற்றில் கதாநாயகனாகவும் 'தகதிமிதா', 'சச்சின்', 'கனா கண்டேன்', 'துள்ளும் காலம்' ஆகிய படங்களில் முக்கிய பாத்திரத்திலும் இப்ப நடிச்சிட்டு இருக்கேன் என்றார்.



சின்னா சினேகா



# ...லட்சுமி வேடத்தில் ...சிந்துதுலானி!

...துலானி தற்போது 'அலை அடிக்குது' ...த்தில் நடித்துவருகிறார். இப்படம் ஜெய ...ன் வாழ்க்கையை அடிப்படையாகக் ...ம் என்று தெரியவந்துள்ளது.

...ட்சுமி விவகாரத்தையும், ஜெயேந் ...ர்ணமால்யா விவகாரத்தையும் இணை ...டத்தின கதையை டைரக்டர் காளிமுத்து ...ப்பதாகத் தெரிகிறது.

...டத்தில் சிந்துதுலானி, ஒரு சாமியா ...க்கப்படுபவராக நடித்துள்ளார். பிறகு ...மியாரின் தில்லு முல்லுகளை அரசு ...ன் துணையோடு அம்பலப்படுத்துவ ... அமைந்துள்ளது.

...துலானி இப்படத்தில் மிகக் குறைந்த ...ாடு நடிக்கிறாராம். போதாதற்கு ...க நேகாவையும் ஒருபாடலுக்கு களத் ...கிவிட்டுள்ளார். இந்த சகோதரிகள ... பிரபாரொட்டி என்ற அழகியும் ...காதாவில் குதித்துள்ளார். எனவே, ...டிக்குது' படத்தில் கவர்ச்சி அலைக்கு ...ருக்காது.

# தமிழ் மக்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரே அமைப்பு விடுதலைப்புலிகளே!

## கிழக்கு பல்கலைச் சமூகம் ஐ.நா செயலருக்கு கண்டன அறிக்கை

(மட்டக்களப்பு)

***விடுதலைப்புலிகள் சிறார்களைப் படையில் சேர்த்துக் கொள்வதாக ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவிததிருந்த கருத்தை கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் வன்மையாகக் கண்டித்து இது தொடர்பாகக் கண்டன அறிக்கை ஒன்றையும் ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.***

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சிறுவர்களைக் கடடாயமாகப் படையோடு ஆட்சோகும் நாடுகள், அமைப்புக்கள் பட்டியலில் உள்ளடக்க ஐ.நா முயறசிகளை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

சிங்களப் பேரினவாதத்தினதும்,,பேரின அரசிடமிருநதும தமிழ மக்களைப் பாதுகாக்கக்கூடிய, அவர்களின் உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமாய் வாழ வழிசெயயக்கூடிய ஒரே அமைப்பாக தமிழர்கள் விடுதலைப்புலிகளையே நம்பிக்கை கொள்கின்றனர்.

படைத்துறை ரீதியில் மிகப் பாரிய வெற்றிகளைப் பெற்றுத் தந்த விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தினது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து ஒரு யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதுடன், சமாதானததுககான தமது முன் முயல்வையும் வெளிப்படுத்தினார்கள். பல்வேறுபட்ட உள்ளூர், சர்வதேச அமைப்புக்களுடன் நல்லுறவைப்பேணி அவர்களின் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள்.


தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன் அதனைப் பல்வேறு ஆத்திரமூட்டல்களுககும் மத்தியிலும் இதுவரை இறுக்கக கடைப்பிடித்து வருகின்றனர். கடந்தகாலஙகளில் ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாதம் தன் படைத்துறையைகொண்டு ஏவிவிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் போது தமது தாய், தந்தையரைப் பலிகொடுத்த இளைஞர்களைக் காப்பகங்கள் அமைத்து பாதுகாத்து பராமரித்தவர்கள் இவர்கள். இன்றும் இவவகையான காபபகங்கள் பல சிறப்பாக இயங்கிவருகின்றன.


ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது புலிகள் மேற்கொண்ட மீட்பு நிவாரணப் பணிகளை சர்வதேச சமூகமே வியந்து பாராட்டி நின்றது. அவ்வனர்த்தத்தில் உறவுகளைப் பறிகொடுத்த சிறுவர்களையும் அரவணைத்துப் பராமரிக்கும் பாரிய பணியையும் விடுதலைப்புலிகள் செய்து வருகின்றனர்.

மற்றும் விடுதலைப்புலிகளுடன் சுயமாக இணைநதுகொணட சிறுவர்கள் பலர் பல்வேறு சந்தர்பபங்களில் யுனிசெப ஊடாகவும், பொது அமைப்புகள உடாகவும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கூட இவ்வாறு 23 சிறுவர்கள் கிளிநொச்சியில் வைத்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனா.

இந்நிலையில் இன்று ஐ.நா வெளியிட்டிருக்கும் ஆடசேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் பட்டியலில் உள்ள பெயருக்குரிய அநேகர் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பது எம்மால் காணமுடிகிறது. மாணவர்கள், தொழில் செய்பவர்கள், மற்றும் திருமணம்செய்து குழந்தைகள் உள்ளவர்கள் கூட இப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைமைகளில் பல சவால்களுக்கு மத்தியில் யுத்த நிறுத்ததை சீராகப் பேணியும், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிகக முன் முயல்புகளை மேற்கொண்டும் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் துயாதுடைப்புப் பணிகளில் காத்திரமாக ஈடுபட்டுவரும் விடுதலைப்புலிகள் மீதான இவவகையான ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கள் கண்டிக்கத்தக்கதாகும் என அக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது. (ற)





**புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவ'ன் தொழ'ல்நுட்ப ஆலோசகர் மற்றும் அலுவலக ஊழியர்களையும் இதில் கலந்துகொண்டோரையும் படங்களில் காண்க.**

**படங்கள் - மயூரன்**

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பொலிஸ் மா அதிபர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் இடம் பெற்றவேளை நாம் மக்களைக் காப்பாற்றுவது குறித்து தீர்மானித்துக கொண்டிருந்தபோது அவ்விடத்தில்நின்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து ஓடிவிட்டதாக பொலிஸமா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேசிய அனர்த்தங்களுக்கான பாராளுமன்றத் தெரிவிக்குழுக் கூட்டததில உரையாறறும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான மக்களை மீட்பதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாது ரணில் தப்பியோடியமையானது நகைப்புக்கிடமானது என அவா கூறியுள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு தப்பியோடியிருக்கமாட்டார் எனத் தெரிவுக்குழுத்தலைவர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

ரணில் ஓடியதற்கு அவர் கூறிய தகவலை தான் நம்பவில்லை எனவும் அவா கூறியுள்ளார். (ற-6)

## இந்துமத நிறுவனப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழககு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை எல்லோரும் நன்கறிவர்.

இந்து கலாசார அமைச்சு இந்து மத நிறுவனங்களை ஒன்றிணைத்து சுனாமி நிவாரணப் பணிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பதுடன் நின்றுவிடாமல், இந் நிறுவனங்களுக்கு வரும் நிவாரணப் பொருட்களையும் தீர்வையின்றிப் பெறுவதற்கு உதவி செய்துவருகின்றது.

மேலும், இப்பொருட்கள் வடககு கிழககிலுள்ள சகல மாவட்டத்திற்கும் சென்றடைவதையும் உறுதிப்படுத்தி இவ்வமைச்சு செயறபட்டு வருகின்றது.

தற்போது இந்நிறுவனங்கள் புனருத்தாரணப் பணிகளில தம்மை ஈடுபடுத்த இருப்பதால் இதுதொடர்பாக அரசாஙகத்தின் திட்டம் தொடர்பாகவும். மற்றும் அரசின் உதவிகள். சலுகைகள மறறும் அங்கீகாரம் என்பவற்றை அறிந்து கொள்வதற்காக இந்து கலாசார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடனான ஓர் சந்திப்பை கடந்த 24ஆம் திகதி ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இச் சந்திப்பில் அகில இலஙகை இந்து மாமன்றம் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை, இராமகிருஷ்ணமிஷன், ஹரே கிருஷ்ண பகதிக் கழகம், இந்து சேவா சங்கம், காயத்திரி பீடம், ஸ்ரீ சத்திய சாயி பாபா நிலையம், கொழும்பு தமிழ்ச சங்கம், உலக ஆன்மீக எழுச்சிப் பேரவை, கொழும்பு இந்துக் கலலூரி, அன்னை ஆதிபரா சக்தி இல்லம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மற்றும் பல நிறுவனங்கள கலந்துகொணடு தமது திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்கள்.

இக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் இந்து கலாசார அமைச்சின் மதியுரைஞர் மகேஸவரி வேலாயுதம் இக்கலநதுரையாடலின் நோக்கம் பற்றியும் இநநிறுவனங்கள் இதுவரை செயத செயற்பாடுகள் தொடர்பாகவும். எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

மேலும் இந் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கும், குறிப்பாக பொதுப் பாதுகாப்பு, மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜவின் உதவிகளுககும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தின்போது ஜனாதிபதி கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக கட்டியெழுப்புவது தொடர்பாக அரசாங்கம் நகர, கிராம கட்டமைப்புத் திடடஙகளை வைத்திருப்பதாகவும், அதற்கமையவே வீடுகள் கட்டப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

மீளக் கட்டமைப்புத் தொடர்பான திட்டங்களைத் தம்மிடம சமர்பிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி அனுமதி பெற்று அவற்றைச் செயற்படுத்தலாம் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக அகில இலங்கை இந்த மாமன்றத் தலைவர் க.நீலகண்டன் இச் சந்திப்பை ஏற்படுத்திக் தந்த இந்து கலாசார அமைச்சருக்கும ஜனாதிபதிக்கும நிறுவனங்களின் சார்பாக தனது நன்றியைத் தெரிவித்தா. (ற)

## துவிச்சக்கர வண்டி வழங்கி உதவி

(வட்டுக்கோட்டை)

வட்டுககோட்டை இநது வாலிபர் சங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தைச சேர்நத சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 30, துவிச்சக்கர வணடிகளை வழங்கி உதவியுள்ளது. (க-39)

## வனப் பரிபாலன மாநாடு இன்று

(கொழும்பு)

பதினேழாவது பொது நலவாய நாடுகளின் வனப்பரிபாலன மாநாடு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று தொடாக்கம் அடுத்த மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

உலக நாடுகளின் வனப்பாதுகாப்பும் நிலையான முகாமைத்துவமும் என்பது இம்மாநாட்டின் தொணிப்பொருளாகும. இதன் கருதது வறுமையை ஒழிப்பதில் வனப்பிரதேசத்தின் பங்கு என்பதாகும்.

27 நாடுகளைச் சேர்நத நூற்றுககுமதிகமான பிரதிநிதிகள் இம மாநாட்டில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.. (க-7)

## பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சி பத்திரத்துக்கான கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாடசிப் பத்திரங்களை விநியோகிக்கின்ற போது அறவடப்படுகின்ற கடடணத்தை அதிகரிப்பதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது.

இது தொடர்பாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் மேலதிக பதிவாளர் நாயகம் குணசேகர தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் தற்போது அத்தாட்சிப் பத்திரமொன்றுக்கு அறவிடபபடுகின்ற 5ரூபா முத்திரைக் கட்டணத்தை 25ரூபாவாக அதிகரிக்கவும உத்தேசித்திருபபதாக அவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாக முத்திரைக் கடடணம் திருத்தி அமைக்கப் படவில்லை என்பதினாலேயே கட்டணத்தை அதிகரிக்க வேண்டியிருந்ததாக மேலதிக பதிவாளர் நாயகம் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் உறுதிப்பத்திரங்களுக்கான பிரதிகள், உறுதிப் பத்திரங்களை பரிசீலித்தல, உறுதிப்பத்திரங்களின் சுருக்கப் பிரதிகள் என்பவற்றுக்கான கட்டணங்களை அதிகரிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றார். (க-9)

## இன்று ஒரு தகவல்

# மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் சனக்கூட்டம் நிறைந்திருந்தது. இயேசுநாதர் பேசிக்கொண்டிருந்தார். அப்போது பிரமாண்டமான துலாக்கோல் ஒன்றை அந்த மக்களுககுக் காட்டினார். அதுபோன்ற ஒரு தராசை அந்த மக்கள முன்னர் பார்த்ததே இல்லை. அவ்வளவு பெரிய தராசு அது.

இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் அந்தத தராசில் வைத்து எடைபோடுகிறார்அவர். அந்தப் பெரிய தராசு ஆகாயத்திலிருந்து தொங்கவிடப்பட்டது போல இருக்கிறது. அந்தத் தராசில் ஒரு பக்கத்துத் தட்டில் அந்த யூதேயா மலைப்பகுதியில் கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் எடுத்து வைத்தார்.

மலைச்சாரலில் வளர்ந்திருந்த ஒலிவ் மரங்கள், மலையடிவாரத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஆட்டு மந்தைகள் எல்லாவற்றையும் வைத்தார். அதுவரையில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் மற்றும் உலகில் உள்ள விலை உயர்ந்த பொருட்கள் எல்லாவற்றையும் வைத்தார். இவ்வளவையும் இடது பக்கத் தட்டில் வைத்தார். மக்கள் எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்துக கொண்டிருந்தனர்.

இன்னொரு தட்டில் வைப்பதற்கு எதுவும் மீதியாக இல்லையே என்று மக்கள் பேசிக்கொண்டனர். உலகில் உள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத்தட்டில் வைத்தா யிற்று. அவ்வளவையும் ஈடுகட்டும் அளவிற்கு அடுத்த பக்கத்தில் எதை வைக்க முடியும்? எல்லோரும் ஆவ லுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

இயேசுநாதர் சுற்றும் முற்றும் பார்த்தார். அங்கே பக்கத்தில் இருந்த ஒரு குழந்தையை எடுத்து வலது பக்கத்துத் தட்டில் வைத்தார் அவ்வளவுதான். இடது பக்கத்தட்டு ஆட ஆரம்பித்தது. மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. மிக மிக உயரமான இடத்திற்குப் போய் விட்டது. அதிலிருந்து பொருட்கள் கீழே விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவிற்கு ஆகிவிட்டது.

எல்லோரும் ஒன்றும்புரியாமல் இயேசு பெருமானின் முகத்தைப் பார்க்கிறார்கள். அவர் சொல்கிறார். "ஒருவன் தனது ஆன்மாவிற்கு கேடுவிளைவித்து உலகெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தனது ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்? (மாற்று 8:36-37) என்கிறார்.

இந்த சம்பவத்திலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்ன? இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும விட அதிக விலையுடையது எதுவென்று கேட்டால் அது மனிதனின் ஆன்மாதான் என்பதை இந்தச சம்பவம் மூலமாக அவர் மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறார்.

இன்று நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுதாகப் புரிந்து கொள்ளவில்லை அதுதான் காரணம். இப்போதெல்லாம் உலகத்தில் அங்கே இங்கே நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால் மனித உயிர் மிகவும் மலிதாகிவிட்டதோ என்று நினைப்புத்தான் வருகிறது.

அண்மையில் பத்திரிகையில் ஒரு நகைச் சுவைத் துணுக்கு வாசித்தேன். ஒரு ராஜா காட்டுக்கு வேட்டைக்குப் போய் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது அவருடன் வந்து கொண்டிருப்பவர்களிடம் விசாரிக்கிறார். "அமைச்சர் இருக்கிறாரா?" என்று. "இதோ இருக்கிறேன்" என்றார் அமைச்சர். "சேவகர் இருக்கிறாரா?" என்றார். "இதோ இருக்கிறேன்" என்றா சேவகர். "தளபதி இருக்கிறாரா?" எனறா மன்னர். 'இருக்கிறேன்' என்றார் தளபதி.

"அப்பாடா! அப்படி என்றால் நான் சுட்டது கரடியைத தான்" என்கிறார் அந்த ராஜா. மனித உயிர் மீது மன்னருக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யாழ்.வாசி கனடாவில் கொலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா செல்வகுமார் (வயது-25) தொழில் நிமிர்த்தமாக கனடா சென்று இருந்தார். இவர் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை இரவுவேளை இனந் தெரியாதோரால் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (ப-126)

# இ.தொ.கா வின் இராஜினாமா அரசியல் நாடகத்தின் பின்னணி

## அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கடந்த வருட இறுதியில் ஆளும் கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளது. தீர்மானத்தை இ.தொ.கா பொதுச் செயலாளர், பிரதமர் ஊடாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளாராம்.

ஆளும் கட்சியில் பதவிகளையும் சலுகைகளையும் எதிர்பார்த்து எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் இணைந்து கொள்ளும் இ.தொ.கா.வின் எதிர்பார்ப்புக்கள் தற்போதைய அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியவில்லை என ஒரு விளக்கம் எல்லோருடைய மனதிலும் எழலாம்.

அதுவே காரணமாக இருநதாலும் இ.தொ.கா. இப்படி ஒரு நெருக்குதலை ஆளும் கூட்டணி மீது திணிக்க இந்த கால கட்டத்தை தேர்ந்தெடுத்திருக்குமா? ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யின் கருத்துக்களும் பங்களிப்புகளுமே நாட்டின் அனர்த்த நிலையை சாட்டாக வைத்து ஜனாதிபதியால் புறக்கணிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட நிலையில் ஒப்பீட்டளவில் மிகச்சிறிய பாராளுமன்ற அங்கத்துவம உள்ள இ.தொ.கா.வின் மிரட்டல்கள் கவனிப்பிற்குள்ளாகும் என எந்தவொரு பகுத்தறிவுள்ளவர்களினால் நியாயப்படுத்த முடியுமா? இல்லை. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் தான் தேசிய அனர்த்த காலத்தல் பொறுப்பற்ற முறையில் இ.தொ.கா. போன்ற சிறிய கட்சிகளை அரவணைத்து அரசாங்கத்தை ஆட்டம் கொள்ளவைத்து தாம் ஆட்சியேற எத்தனிக்கும் அரசியல் தற்கொலையை மேற்கொள்ளுவாரா? இ.தொ.கா.வின் நடவடிக்கை வழமைபோல் அக்கட்சித் தலைவர்களின் சுயலாபத்திற்காக மேற்கொள்ளப்பட்டாலும் அரசாங்கத்திற்கு தக்க நேரத்தில் நெருக்கடி கொடுத்து சலுகைகளை பெற அல்ல! மாற்றாக அரசாங்கத்தின் மேல் உள்ள வெளி நெருககடிகளை திசைதிருப்பி அரசாங்கத்திற்கு உதவ அவர்களோடு இணைந்து மேடையேற்றப்படும ஒரு நயவஞ்சக நாடகமென்றே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற)

# மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கான தமிழீழ காவல்துறையின் வேண்டுகோள் !

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப்பிரிவினர் மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கான வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

இதன் விபரம் வருமாறு,

அண்மைக்காலத்தில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கூடுதலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் சாரதிகளின் கவலையீனத்தாலும் வேகத்தினாலும் வீதிகள் அகலம் குறைவின் காரணத்தாலும் இடம் பெற்று வருகின்றன. இவ் விபத்துக்கள் இடம்பெறுவதற்குக் காரணம் மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதியின் விதிமுறைகளை பின்பற்றாது சாரத்தியம் செய்வதே ஆகும. இவ் விபத்துக்களைத் தடுப்பதற்கு மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதியின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும்.

வதியின் விதிமுறையெனக் கூறும்போது மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது வீதியின் இடதுபக்கமாக செலுத்துதல் வேண்டும். ஒரு வாகனத்தை முந்திச் செல்லும்போது வலது பக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும். இதேபோன்று இடது பக்கமாக மோட்டார் சைக்கிளில் செல்லும்போது தாங்கள் வீதியின் தார் விளிம்பில் இருந்து மூன்று அடிக்குள் செலுத்துதல் வேண்டும்.

வதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும்போது ஓடிக்கொண்டிருக்கும் இன்னொரு மோட்டார் சைக்கிளில் பிடித்துக் கொண்டு செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

வீதியில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது பின்னால் வரும் வாகனங்களுக்கு வழிவிடாது நடு வீதியால் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

முன்னால் செல்லும் வாகனங்களை சந்திகளில் பாதசாரதி கடைவைகளில் வளைவு நெளிவான இடங்களில் முந்திச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிளில் கிளை வீதியிலிருந்து பிரதான வீதிககு நுழையும்போது மோட்டார் சைக்கிளை கிளை வீதியில் நிறுத்தி பிரதான வீதியின் வலதுபக்கமும் பார்த்து, பின் இடதுபக்கமும் பார்த்துத் திருப்பவும். வலதுபக்கம் பார்த்து வலது பக்கங்களில் இருந்து வரும் வாகனங்களையும் இடது பக்கங்களில் இருந்து வரும் வாகனங்களையும் செல்ல அனுமதித்த பின் மோட்டார் சைக்கிளை பிரதான வீதிக்குள் இடையூறு இன்றி வீதியின் விதிமுறைகளுக்கேற்ப செலுத்துதல் வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் பிரதான வீதியால் சென்று கிளை வீதிக்கோ அல்லது கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும்போது திசைகேற்ப நூறு அடிக்கு முன் சைகையை தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது முன்பக்கத்தில் வெள்ளை நிற (முகப்பு வெளிச்சம்) வெளிச்சத்தையும் பின்பக்கத்தில் சிவப்பு நிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்பு நிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும்.

வெளிச்சமின்றி செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது முறையான கட்டுப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் பொருட்களை ஏற்றிச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் அதற்கு மேற்படடோரை ஏற்றிச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது வீதியில் தேவையற்ற பொருட்கள் மீது தாங்கள் பார்வையைச் செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது மென்நிற ஆடை அணிந்திருத்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் வீதியில் செலுத்தும் போது வீதியில் பணிக்கப்பட்ட வேகத்தைக் கடைப்பிடித்துச் செலுத்துதல் வேண்டும். பிரதான வீதியில் இருந்து இடது பக்கம் அல்லது வலது பக்கம் வரும் வீதிக்கு திரும்புவதற்காக இருந்தால் மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் வரும் வாகனங்கள் நேராகச் செல்லுமானால் அதற்கு வழி விடவேண்டும்.

மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும்போது மதுபோதையில் செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். வீதியில் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கு முன மோட்டார் சைக்கிளின் பொறிமுறைகள் விளக்குகள் டயர், தடுப்புக்கள், ஒலிக்கருவிகள் என்பன சரியான முறையில் உள்ளதா என உறுதிப் படுத்துங்கள். இவற்றைக் கடைப்பிடித்து வீதி விபத்திலிருந்து உயிர் இழப்புக்களையும் உடமை இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ற)

# அநீதியான முறையில் இடமாற்றம்; ம.உ.ஆ.குழுவில் ஆசிரியர்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

அநீதியான முறையில் தாம் இடமாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் இரண்டுபேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.செயலகத்தில் முறையிட்டுள்ளனர்.

தாம் பாடசாலை வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்கள், 56 வயது கடந்த இருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எந்தவொரு இடமாற்றமாயினும் அது சம்பந்தமாக கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின்படி, இடமாற்றசபை ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனினும், தமது இடமாற்றம் இடமாற்றசபை ஊடாக செய்யப்படவில்லை எனவும் இது தொடர்பாக தம்மை விசாரணைசெய்யவில்லை எனவும் அவர்கள தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

குற்றப்பத்திரம் எதுவும் சமர்ப்பிக்காமல் தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கமைவாகவே தாம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதுதொடர்பாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினால் வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு இவ் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள போதிலும் இதுவரை தமது இடமாற்றம் ரத்துச் செய்யப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-19)

# வேதனைகளும் சோதனைகளும் இறைவனிடம் வழிநடத்தும் கருவிகள்!

எதிர்பார்ப்பது காலத்தால் கிடைக்கும் பொழுது அதனால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சந்தேகம் கொள்ளும்



நிலைகள் உருவாகும் போது மகிழ்ச்சிக்குப் பதிலாக துன்பங்களும், சோகங்களுமே எம்மைத் தொடர்வதை அனுபவ வாயிலாக அறிகினறோம். தெரிந்து கொண்டு நாம் பிழைவிடுகின்றோம் என்றால் நாம் பரிதாபத்துக்குரியவர்களே.

எகிப்திலே அடிமை வாழ்வுக்குட்பட்டிருந்த மக்களை இறைவன் மோசே தலைமையில் விடுவிதது வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி பாலைவனத்தின் ஊடாக அழைத்துக் கொண்டுவரும் போது, அம்மக்கள் தலைவன் மோசேயின் மேல் குறைபிடித்தார்கள் தண்ணீர் தாகத்தால் மடியப் போகின்றோம் என்று முணுமுணுத்தார்கள். அவருக்கு எதிராக எழுந்தார்கள். இவ்வாறான செயல்கள் எம்மத்தியிலும் எம்பங்குகளிலும் கூட நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஆனால் மோசே இறைவனிடம் வேண்டி அம்மக்களின் குறைகளைப் போக்கியதினாலே இறைவனின் வல்லமை

## பரமபிதா காட்டிய பாதை

யுள்ள வழிநடத்தலை அங்கே உணர்ந்து கொண்டார்கள்.

### விசுவாச வாழ்வை செயற்படுத்த

கிறிஸ்தவ வாழ்வின் வழி நடத்தலுக்கு விசுவாச வாழ்வு முக்கியமானது. விசுவாசச் செயற்பாடுகளை நாம் இழந்துவிட்டால் சந்தேகக் காரணங்கள் எம்மைத் தொடர்ந்து அலைக்கழிக்கவே செய்யும். தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும். இதனாலே "வாழ்வு" என்ற கொடை அர்த்தமிழந்து நிற்கும். சோதனைகளும், வேதனைகளும், விரக்தி நிலைகளும் தலைதூக்கும்.

எனவே எம் வாழ்வானது இயேசுக் கிறிஸ்துவிலே கட்டப்பட்ட விசுவாச வாழ்வாக அமைநதால் துன்பங்கள், சோதனைகள் எம்மை இயேசுக்கிறிஸ்து அண்டை வழிநடத்தும் கருவிகளாக அமையும். இயேசு தாமே கூறினார். "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என உணவு" (யோவான் 4:34) என்று தந்தையாம் இறைவனை முதன்மைப் படுத்துவதைக் காண்கின்றோம். இயேசு மெசியாவாக இருந்தும் பரமபிதா காட்டிய பாதையில் நடந்தார். அவருக்குச் சான்று பகர்ந்தார். இதனாலே அவர் இறை மகனாகப போற்றிப் புகழப்படுகின்றார்.

### விண்ணக மகிமையை அடைந்து கொள்ள

இறை இரக்கம் என்ற ஊற்றானது அளவு கடந்த விதமாகப் பிரவாகித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த ஊற்றருகே சென்று அதனைக்கண்டு அள்ளிப் பருகுகின்றவர்களே ஆன்ம தாகம் தீர்த்துக் கொள்வர். உலகம் என்ற நவநாகரிகப் பிரவாகத்தை அள்ளிப் பருகுவதினாலே அனேகர் ஆவல் கொண்டு அலைந்து திரிகின்றனர். ஆனால் அவர்களால் தமக்கு ஏற்படும் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளமுடியாது.

எவ்வாறு சமாரியப் பெண் இயேசுவிடம் சென்று "ஐயா தாகம் எடுக்காத அத் தண்ணீரை எனக்கு கொடும்" (யோ 5:14-15) நீர் தான் மெசியா என்பதைக் கண்டு கொண்டேன் என்று தன் வாழ்வை மாற்றி இறைவாழ்வை அடைந்து கொண்டது மாதிரி நாம் ஒவ்வொருவரும் இத் தவக்காலத்திலே, எம் விசுவாசத்தைப் புதுப்பித்து இயேசுவிலே, அவரின் வார்த்தையிலே ஆழப்படுத்தி வாழும்போது நாமும் இறைவாழ்வை அடைந்து கொள்ளும் பேற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

### ஆண்டவனின் அருள் வரங்களைப் பெற்றுக் கொள்ள

தவக்காலம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னையும், தன் வாழ்வையும் பின்திரும்பிப் பார்த்து சீர் செய்யும் அரிய வாய்ப்பான இறைவனின் அருள் பாலிப்பின் காலமாகும். எம் ஒறுத்தல், தான, தரும கிருத்தியங்கள் மூலமாகவும் இறைவனிடம் அண்டிச் சென்று எம்மை இறைவாழ்வுக்குள் இணைத்துக்கொள்ள நாம் தான் முயற்சிகளைச் செய்யவேண்டும். அயலவர்மட்டில் அதிக அக்கறையுள்ளவர்களாகச் செயற்பட்டு ஆண்டவனின் அருள் வரங்களைப் பெற்றுக்கொள்வோமாக. □

**அமல அருள்தாசன்**

## நீரில் மூழ்கி மாணவன் பலி

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவன் அனுராதபுரம் திஸராகம குளத்தில் குளிக்கச் சென்ற சமயம் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வியாபாரக் கற்கைபீட 2 ஆம் வருட மாணவனான சந்துன்குமார பெரேரா என்ற மாணவனே உயிரிழந்தவராவார். மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையில் வினாடி வினாப் போட்டி ஒன்றை நடாத்த யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு தீர்மானித்துள்ளது.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், யாழ்மாவட்ட மாணவர் அமைப்புடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 06.03.2005 ஆகும், போட்டிகள் மாவட்ட மட்டத்தில் இடம்பெறும்.

ஒரு பாடசாலையிலிருந்து ஒரு அணி மாத்திரம் பங்குபற்றலாம். வெறறிபெறும் முதல் மூன்று அணிகளுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன், முதல் இடம்பெறும் அணியின் போட்டியாளர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். (க)

## உதவி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட வெற்றிலைக்கேணி பிரதேச மக்களிற்கும் வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களிற்கும் பாட்சாலை பாக், சவற்காரம், மண்ணெண்ணெய் குக்கர், தண்ணீர்க் குவளை, ஆண்களிற்கான சேட், காற்சட்டை போன்ற பொருட்களை வழங்கியுள்ளது. (க)

## சிவராத்திரி நிகழ்வு

(கற்கோவளம்)

பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள சாயிசேவா நிலையத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய் இரவு சிவராத்திரி நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் பஜனை, பூஜை,சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளது. (க-104)

## எக்காரணம் கொண்டும் ஐ.தே.கவை விட்டு விலகேன்

### என்கிறார் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வலகி எக்காரணம் கொண்டும் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லையென்று எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழனன்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பலர் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அரசாங்கத்துடன் இணையப் போகின்றீர்களா? என்று கேட்கின்றனர்.

விசேடமாக ஊடக அமைச்சை பொறுப்பேற்று செயற்படப் போகினறீர்களா? என்று கேட்கின்றனர்.

இத்தகைய கேள்விகளால் சிறிது நேரம் ஆச்சரியமடைந்தேன்.

இவ்வாறான எந்தவொரு எண்ணமும் எனது மனதில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தோன்றவில்லை.

எமக்கு புதிய அரசியல் கலாசாரம ஒன்று தேவை. புதிய அரசியல் கலாசாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வாகீச கலாநிதி எழுதிய யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள் எனும் ஆய்வுப் பெருநூல் வெளியீட்டு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இரவு - 7 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபாஜெயராசா தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (க)

## யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியினுடைய கதவு உடைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையின் பல்கலைகழகப் பகுதியில் உள்ள உட்புறக் கதவு உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஊழியர்கள் கடமைக்கு வந்தபோதே வங்கியின கதவு உடைக்கப்பட்டமை தெரிய வந்தது. இருப்பினும் வங்கியில் இருந்த பணமோ, நகையோ, ஆவணங்களோ எதுவும் திருட்டுப்போகாமல் அப்படியே இருந்தன என்று கூறப்படுகிறது.

பதிக்கும் இயந்திரம் ஒன்று மட்டும் காணாமற் போயுள்ளது என்று வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக யாழ். பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து, சம்பவ இடத்திற்கு நேரில் விரைந்த பொலிஸார், வங்கி முகாமையாளர், அலுவலர்கள், ஊழியர்கள் அனைவரிடமும் தகவல்களைப் பெற்றனர்.

அத்துடன், இது தொடர்பான தடயங்களையும் குறித்துச் சென்றனர். பின்னர் வங்கியின் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெற்றன. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ப-95,9)

## பாண்ட் வாத்தியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் அமைப்பு யாழ்.மாவட்ட பாடசாலை பாண்ட் வாத்திய அணிகளை வளர்க்கும் நோக்குடனும் தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டும் மாவட்ட மட்டத்தில் பாண்ட் வாத்தியப் போட்டி ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

எனவே, பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் தமது கோட்ட அலுவலகங்களுடனோ அல்லது மாணவர் அமைப்புடனோ தொடர்பு கொண்டு போட்டி நிபந்தனைகள் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்.

போட்டிக்குரிய இசைகளாக தமது பாடசாலைக் கீதங்களுடன் பொதுக்கீதம் (புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்) இசைக்கப்பட வேண்டும்.

வலயமட்டப் போட்டிகள் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் இடம் பெறும்.

இதில் முதல்மூன்று இடங்களைப் பெறும் அணிகள் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றுவர் எனத் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## தொழிலாளர்களுக்கு அனுகூலம் தரும் விசேட சட்டமூலங்கள் தயாரிப்பு

(கொழும்பு)

தொழிலாளர் வர்க்கத்திற்கு சிறந்த அனுகூலங்களை தரக்கூடிய இழப்பீட்டு முறை வகுக்கப்பட்டிருப்பதாக தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இம் முறைக்கமைய ஓய்வு பெறும் ஊழியர் ஒருவருக்கு 60 மாத சம்பள்க் கொடுப்பன்வுகளுக்கு சமமான தொகை இழப்பீடாக வழங்கப்படுகிறது.

அரசாங்கத்தின் விசேட நிதியத்தினூடாக 12 மாத சம்பளக் கொடுப்பனவுக்கு சமனான விசேட இழப்பீட்டுக் கொடுப்பனவும் பெற்றுக்கொடுக்கப்படும்.

பதவி விலகும் ஊழியர்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் செனவிரத்ன தெரிவித்தார்.

தொழிற்சங்க அமைப்புக்கள் தெரிவித்த கருத்துக்களைப் பரிசீலிதத பின்னரே இழப்பீட்டு முறை வகுக்கப்பட்டது.

இது தொடர்பான அதிகாரங்கள் தொழில் ஆணையாளருக்கு வழங்கப்படும்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தொழிற்சட்டங்கள் சுதந்திர வர்த்தக வலய கைத்தொழிற் பேட்டைகள் சார்ந்த தொழிலாளர்களுக்கும் ஏற்புடையதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதிக தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தரும் வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதைத் தடுக்கும் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட இருப்பதாகவும் கூறிய அவர், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பைப் பெற்றுச் செல்வோர் சட்டவிரோத நடைமுறைகளை பின்பற்றக் கூடாதெனவும் வேண்டுகோள் விடுத்தார். (க-7)

## அனர்த்தம் குறித்த தகவல்களை உடன் அறிவிக்க ஆய்வுநடத்துக!

### சுற்றாடல் அமைச்சு ஜப்பானிடம் கோரிக்கை

(கொழும்பு)

இயற்கை அனர்த்தம் தொடர்பாக விரைவில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையம் ஒன்றை இலங்கையை அண்மித்த பகுதியல் அமைப்பதற்குரிய ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு சுற்றாடல் இயற்கை வள அமைச்சு ஜப்பானிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையினை இலங்கைக்கான ஜப்பான் தூதுவரிடம் எழுத்து மூலம் கையளித்ததாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

இலங்கையை அண்மித்த பகுதிகளில் இவ்வாறான நிலையம் ஒன்றை அமைப்பதற்காக தமது அமைச்சுக்கு அமைசசரவையின் அனுமதி கிடைதது்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையத்தை அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு குவைத் அரசாங்கம் இணக்கம் தெரிவிததுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும் - குறள்

வலம்புரி

## தமிழினத்தின் நலனை இ.தொ.கா. கவனிக்கவேண்டும்

அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலக்கிக்கொண்டுள்ளது.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் சௌ. தொண்டமானின் காலத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆளும் தரப்புடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுவந்தமை வரலாற்று உண்மை.

இந்த உண்மையின் அடிப்படையில் தொண்டமானுக்குப் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பொறுப்பேற்றுக்கொண்ட தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமானும் செயற்பட்டுவந்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தவரை தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணவேண்டிய தேவை கட்டாயமானதாகும். இதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

இதன்காரணமாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காலத்துக்குக்காலம் ஆளும்தரப்புடன் இணைந்துகொண்டு செயற்படுவது குறித்து எவரும் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

ஆனால் அரசுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறமுடியும் என்ற எண்ணப்பாட்டில் செயற்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்தளவு தூரம் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொண்டதென்பது ஆய்வுக்குரியது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆளுந்தரப்பிற்கு ஆதரவு வழங்கிவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை இன்றுவரை பெற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் ஆளுந்தரப்பிற்கு ஆதரவு வழங்கவேண்டிய தேவைதான் என்ன?

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையே பெற்றுக்கொள்ளமுடியாத ஓர் அரசியல்கட்சி, ஆளும் தரப்பிற்கு ஆதரவு வழங்குவதென்பதுக்குள் இருக்கக்கூடிய முக்கியமான விடயம் பதவி ஆசை என்பதாகவே இருக்கமுடியும்.

ஆம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்தபோது பலரும் அதனை விமர்சித்திருந்தனர். இருந்தும் அமைச்சுப் பதவிக்காகவே அவர் ஆளுந்தரப்புடன் இணைந்துகொண்டார்.

இலங்கையில் தமிழினத்திற்கு எதிராக ஆளும் தரப்பினர் காலாகாலமாகச் செயற்பட்டுவந்தபோதும் காங்கிரஸின் ஆதரவில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை. குறிப்பாக 1983களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஈழத் தமிழர்களுக்கு நடந்த மிகக்கொடூரமான துரோகத்தனத்தைக் கண்டிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கான தொண்டமானின் ஆதரவு தொடர்ந்தது.

தனித்து மலையக மக்களின் நலன் என்ற கொள்கை ஒருகாலத்தில் பொருத்துடையதாக இருந்தாலும், சமகாலத்தில் அத்தகைய குறுகிய எண்ணப்பாடு தமிழினத்திற்கு உகந்ததாக இருக்க மாட்டாது. இந்த உண்மையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மலையக மக்களின் நலன்கள் உரிமைகள் கவனிக்கப்படவேண்டும் என்பதற்கு அப்பால் இலங்கை மண்ணில் தமிழினத்தின் முகவரிகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உயர்ந்தகொள்கையை தமிழினம் சார்ந்த அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும் கொண்டிருப்பது அவசியமாகும்.

அவ்வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஒவவொரு அசைவும் தமிழனத்தின் நன்மை என்ற அடிப்படையில் அமையவேண்டும் என்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும்.

---

### வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம்

# தொலைபேசிச் சேவையை இலவசமாக்குமாறு அமைச்சர் மங்களவுக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்த நிவாரண, மனிதாபிமானப் பணிகளை செவ்வனே மேற்கொள்வதற்கு ஏற்றவகையில், தமது தொலைபேசி முழுநாளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால் இத் தொலைபேசிச் சேவையை இலவசமாக்குமாறு கோரி வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

சமாசப் பொது முகாமையாளர் க.சூரியகுமாரனின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரின் விபரம் வருமாறு,

எமது சமாசக் காரியாலயத்தில் பயன்படுத்தப்படும் தொலைபேசி இணைப்பு எவ்வித தாமதமுமின்றி ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கடந்த 26.12.2004 அன்று நடைபெற்ற சுனாமி பேரலை அனாத்தம் காரணமாக தொடர்ந்தும் இரவு பகலாக 24மணி நேரமும் எமது தொலைபேசி பாவனையிலிருந்து வந்துள்ளது. தற்போதும் இருந்துவருகின்றது.

எனவே, இவ் அனர்த்தம் காரணமாக எமது தொலைபேசிச் சேவையை இலவசமாக்கித்தர தாங்கள் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது தொலைபேசிச் சேவையால் எமது கடற்றொழில் மக்களின் அன்றாட பிரச்சினைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் செவ்வனே செய்ய முடிந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-43)

---

# 143 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள்

(கொழும்பு)

1998 ஆம் ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் 143 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான உத்தரவினை கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டன.

இதுதொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் தகவல் தருகையில்,

2001ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின்படி வழங்கப்பட்ட வேண்டிய 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த வருடம் 857 பேருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டது. மிகுதி 143 பேரின் நியமனங்கள் தொடர்பாக இழுபறிநிலை இருந்துவந்தது.

கடந்த வருடம் ஒக்டோபர் 15ஆம் திகதிக்கிடையில் நியமனங்கள் வழங்கப்படாவிட்டால் நாங்கள் நேரடியாக தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என இவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த நியமனங்கள் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது. சுனாமி அனர்த்தம் காரணமாக இழுபறிநிலையில் நேற்று முன்தினம் மாலை கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் இணைப்புச் செயலாளருடன் பேசியதன் விளைவாக நேற்று 143 பேருக்கும் நிரந்தர நியமனக கடிதங்களை வழங்குமாறு வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இராசலிங்கத்திடம் கடிதம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரமளவில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனைவிட, பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சேவையிலுள்ளோருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான கடிதத்தை உடனடியாகத் தயாரிக்குமாறு செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார். (ந-4)

---

# 3 வருடங்களில் 5000 தடவைகளுக்கு மேல் புலிகள் உடன்படிக்கையை மீறியுள்ளனர்

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத்திற்கெதிரான புலிகளின் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் தவறியுள்ளதுடன் இவற்றை போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னால் மறைக்கவும் அரசாங்கம் முயல்வதாக ஜாதிக ஹெல உறுமய கண்டனம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் கிளாலிப் பகுதியில் ஒரு இராணுவச் சிப்பாய பலியாகியதுடன் இன்னொருவர் காயமடைந்துள்ள விவகாரத்தில் அரசாங்கமோ, கண்காணிப்புக் குழுவினரோ உரிய கவனம் எடுக்கவில்லை.

விடுதலைப்புலிகள் இதுவரை போர்நிறுத்த உடன்படிக்கையினை 5 ஆயிரம் தடவைகளுக்கு மேல் மீறியுள்ளனர். கிட்டத்தட்ட 3 வருடங்களில் 600 சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை கொலை செய்துள்ளனர். இதுபற்றி அரசோ, கண்காணிப்புக் குழுவோ, ஐக்கிய தேசியக் கட்சியினரோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ எதுவும் கவனிக்கவில்லை.

வடகிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் போர்வையில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறார்கள்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னாள் யுத்த நிறுத்தப புரிந்துணர்வு உடன்படிக்கையை பாதுகாக்கும் நோக்கில தனது மக்களினதும் இராணுவத்தினரினதும் நலன்களை கவனிக்கத் தவறியுள்ளது.

இத்தகைய விடுதலைப்புலிகளின் வன்செயல்களைத் தடுக்கத் தவறிய சர்வதேச சமூகமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏன் சமாதானப் பேச்சை இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன ஏனவும் ஹெல உறுமய வினவியுள்ளது. (ந-6)

---

# கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு இல்லை

(கொழும்பு)

கோதுமை மா விநியோகத்தில் நிலவிய ஏகபோக உரிமை நீக்கப்பட்டதால் தட்டுப்பாடு நீங்கியிருப்பதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

போதியளவு கோதுமை மா சந்தையில் விற்பனைக்கிருப்பதாக பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் பராக்கிரம தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட மா தரத்தில் சிறந்ததாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

துபாயிலும், துருக்கியிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா புறக்கோட்டைச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனமும் தனியார் அமைப்புக்களும் வெளிநாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்து விநியோகித்து வருகின்றன.

இருந்தபோதும் சதோசவின் விநியோகம் சீரானதாகக் காணப்படவில்லையெனத் தெரிவித்த தஸநாயக்க, பிறிமா நிறுவனம் விநியோக ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தபோது கோதுமை மாவைக் கொள்வனவு செய்வதில் சில சிக்கல்கள் காணப்பட்டன.

தற்போது சந்தையில் கோதுமை மா தாராளமாகக் கிடைப்பதால் பிரச்சினைகள் நீங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பெரும்போக நெல் சந்தைக்கு வந்திருந்தாலும் பாண் போன்ற உணவுப் பொருட்களுக்கான கிராக்கி குறையவில்லை.

இதனால் தயாரிப்புகள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றன.

6 இலட்சம் பேர்வரை பேக்கரிக் கைத்தொழில் துறையில ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

---

### தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

எல்லையற்ற மனித ஆன்மா எல்லையற்றதைத தவிர வேறெதனாலும் ஒருபோதும் திருப்தி அடைய முடியாது. எல்லையற்ற ஆசை எல்லையற்ற அறிவினால தான் நிறைவடையும். அதற்குக் குறைவான எதனாலும் அல்ல. உலகங்கள் வரும் போகும். அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது. விரிவிடைந்து கொண்டே இருக்கிறது. உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும். கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும். அந்த உலகமா ஆன்மாவின் இலட்சியமாக இருப்பது?

சுவாமி விவேகானந்தர்

## இந்தியத்...

பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் துன்னாலை வல்லிபுர ஆழ்வார கோவிலுக்குச் சென்று வழிபாட்டிலும் கலந்து கொண்டார். தொடர்ந்து சாரதா சேவாச்சிரமத்திற்குச் சென்று சுவாமி சித்ருபானந்தாவுடன கலந்துரையாடினார். (த-101-55)






## அமைச்சர்களுக்கு...

வேண்டுமானால் முஸ்லிம் தேசியத்தை அரவணைத்துத்தான் அதையடைந்து கொள்ள முடியும் என்பதை தமிழ் தேசியத்தின் சிகரமாக இருக்கின்ற வேலுப்பிள்ளை பிரபாகரன் உணர்வாரானால் அதே நோக்கோடு முஸ்லிம் தேசியத்திற்கு எதிரான எதிரிகளை நோக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு வழங்கப்படாத பட்சத்தில் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

வடக்கில் முஸ்லிம்கள் மீளக் குடியமரும் போதுமட்டுமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை தோற்றுவிக்க முடியும். வடமாகாண முஸ்லிம்களுக்கான தீர்வு சரியாக அமையும் பட்சத்தை அடுத்தே கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களைநடத்த முடியும்.

சமாதானத்தின் எதிரிகள் அங்கம் வகிக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடன் நாம் ஒரு போதும் இணையபபோவதில்லை ஆனால் இந்த அரசாங்கம் வெகு விரைவில் ஆட்டம்காணும். முஸ்லிம் தேசியவிரோதிகள், சூசையோடும் மற்றும் பலரோடும் கைலாகு கொடுக்கிறார்கள். என்ன நியாயத்தோடு தமிழ்த்தேசியம் அவர்களுக்கு கைலாகு கொடுக்கிறது என்பதை நாங்கள் கேட்க விரும்புகிறோம். கூடஇருந்து முஸ்லிம தேசியத்திற்கு துரோகம்இழைத தவர்கள் அதே துரோகத்தை தமிழ்த்தேசியத்திற்கும் இழைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

சூசையின் இந்நடவடிக்கை குறித்து தலைவர் பிரபாவின் கவனத்திற்கு கொண்டுவருவேன். இதே வேளை முஸ்லிம்கள் தயாரித்த சமாதானத்தீர்வுத்" திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை அது முழுமைபெறாதபடியால் மேலும் காலம் எடுக்கும் என்றார். இதேவேளை இக்கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தேசியப்பட்டியல் எம்.பி நிஜாமுதீன்,தவிசாளர் பஷீர்சேகுதாவுத உட்பட பலர் கலந்துகொண்டனர் இக்கூடத்தில் 600பேர் வரை கலந்துகொணடனர் 24.10.2004 அன்று யாழ்ப்பாணத்தில நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் நேற்று அங்கு நடைபெற்றதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (த)

## இலங்கைக்கு...

இந்தப் பொருட்களை விரயமாக்கக் கூடாது என்பதற்காக முதியோர இல்லங்களுக்கும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கும் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தாம் உத்தரவிட்டிருப்பதாக கூறினார். (ற-4)

## அரசிலிருந்து...

உடனடியாக சந்திக்க எம்மால் முடியவில்லை. ஆகையால் பிரதமரை சந்தித்து ராஜினாமா கடிதத்தை கையளிக்க முற்பட்ட போது அவர் கடிதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஆகையால் அவரது மேசையில் ராஜினாமா கடிதத்தை வைத்து விட்டு வந்தோம் என்றார். இதேவேளை, கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்திலும் அமைச்சர் முத்து சிவலிங்கம் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(த-4)

## மருத்துவமுகாம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இன்று இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

வடமராட்சி லயன்ஸ் கழகம் -சிலோன் அசோசியேற்ரெட் என்பன இணைந்து பொறியியலாளர் தெய்வசிகாமணி தலைமையில் மருத்துவமுகாமை இன்று காலை 9 மணிமுதல் நடத்தவுள்ளனர். (த-130)

## 30 வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கேவிலில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 30 வீடுகள் இன்று காலை 10.30 மணிக்கு வைபவரீதியாக குடியிருப்பாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.(ற)

## கண்ணீர் அஞ்சலி



### நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு

நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைகிறோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவிப்பதுடன்,

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்ளுவதுடன்,

27-02-2005 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி இந்துமயானத்தில் நடைபெறும் அன்னாரது இறுதிச்சடங்கிலும் அனைத்து தேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்
தேசிய எழுச்சிப்பேரவை
யாழ்ப்பாண மாவட்டம்

(9282)

## கண்ணீர் அஞ்சலி



### நாட்டுப்பற்றாளர்
### கந்தையா ஏரம்பு (ஓய்வு பெற்ற ஆசிரியர்)
### 1-ம் வட்டாரம் புங்குடுதீவு

தீவகத்தின் திருமகனே செல்வா வழிநடந்தவரே
எம் இனத்தின் விடுதலைக்காய் இறுதி
வரை வாழ்ந்தவரே.
தரணியிலே எம் இனம் தழைக்க வழி செய்தாயே
எம் இனத்தின் விடுதலைக்காய் சளைக்காது
போராடி இறுதிவரை வாழ்ந்தாயே.
உந்தன் வழிநின்று எம் மண்ணை நாம் மீட்டு
தமிழீழம் மலர சத்தியமாய் நாம் உழைப்போம்.

அன்னாரின் மறைவை யொட்டி சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அவருடைய குடும்பத்தார், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேசிய எழுச்சிப் பேரவை
புங்குடுதீவு பிரதேசம்.

(1127)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
சரத்குமார். சாக்ஷி.
வடிவேலு நடித்த
காட்சிகள் 11.00, 2.45, 6.00 பு.நே

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
பரத் – சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல்

இன்றுமட்டும்
தினசரி (பு.நே) 10.30
2.30, 6.30, 9.30
அடுத்த வெளியீடு (விரைவில் எதிர்பாருங்கள்)
குருதேவா

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

I.D.D லோக்கல் இணைப்புக்களுடன் எப் பிரதேசத்திற்கும்
தெளிவானமுறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.
11900/=
13900/=


Hello
ஒருவருட உத்தரவாதம் உண்டு
விலை 13900/= மட்டுமே
I.D.D ரூபா 25/= மட்டுமே

சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணைநிறுவனம்

New Branch:
No: 309A, Floor(Opp.union bank)
Galle Road Bambalapitiya
Colombo - 04

அழைப்புக்கான வாடகை
மாதக்கட்டணம்:-150/=
வெளிச் செல்லும் அழைப்பு (பகல்) 1 நிமிடம்: 11/=
வெளிச் செல்லும் அழைப்பு (இரவு) 1 நிமிடம்: 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் 1 நிமிடம்: 4/=
உள்வரும் அழைப்பு இரவு - இலவசம்

குறிப்பு: டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டுமே. மேசைத் தொலைபேசி PACKAGE (பக்கேஜ்) இணைப்புக்களுடன்

சுத்தமான பவர் வோட்டர்

Office: இல.185 முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P. 212227070, 0712399220, 0777281521


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.